# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதா வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 8-4-62 ஞாயிறு | இதழ் 43


'புதினம்' கருத்து

## இளம்பிள்ளை வாதம்-

# அதைவிட பயங்கரமான இரண்டு வாதங்கள்!

இந்த இதழின் மூன்ரும் பக்கத்தில் இளம்பிள்ளைவாத நோயைப் பற்றிய ஒரு கட்டுரையை நீங்கள் படிக்கலாம்.

தென்னிலங்கையில் தொடங்கிய இளம்பிள்ளை வாதநோய் இன்று வட இலங்கைக்கும் வந்துவிட்டது. இதுவரை நூற்றுக் கணக்கானவர்கள் இந்த நோய்க்கு ஆளாகிவிட்டார்கள். பல உயிர்கள் பலி கொள்ளப்பட்டு விட்டன!

இது பயங்கரமான நோயோவென்ருல்—

பயங்கரமானதுதான். ஆரம்பித்த இரண்டு மூன்று தினங்களிலேயே உயிரைக் குடித்துவிடக்கூடிய அத்தனை பயங்கரமானது!

மேல் நாடுகளிலிருந்து இதற்கு மாற்று மருந்துகள் விமானத்தில் பறந்து வந்திருக்கின்றன! வடபகுதிக்கும் உடனே மருந்துகளை அனுப்புமாறு தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத்தை நெருக்கியிருக்கிருர்கள்.

ஆனல்—

இது இளம்பிள்ளைவாதம். — இதைவிடப் பயங்கரமான இரண்டு 'வாத'ங்கள் இலங்கை மக்களைத் பீடித்திருக்கின்றனவே!

'வகுப்புவாதம்' இந்த நாட்டு மக்களின் உடம்போடு ஊறிக் கிடக்கிறதே!

'பொருளாதாரவாதம்' — இலங்கை அரசாங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் குறண்டி இழுக்கிறதே!

இளம்பிள்ளைவாதத்தின் பயங்கரம் கண்ணுக்குத் தெரிகிறது.

இந்த இரண்டு வாதங்களோ அதைவிடப் பயங்கரமானவை! ஆனல் இவற்றின் கொடுமை கண் முன்ருல் தெரியவில்லை.

அடக்குமுறைச் சட்டங்களும், அமைச்சர்களின் அழகான பேச்சுக்களும் இந்த வாதங்களின் கொடூரத்தை மூடிமறைத்துப் பூசி மினுக்கி வைத்திருக்கின்றன!

கொஞ்சம் கொஞ்சமாக இந்த வாதங்கள் இலங்கை மக்களை அரித்துத் தின்று வருகின்றன.

இளம் பிள்ளை வாதத்துக்கு மருந்துகள் எவ்வளவு அவசரமாகத் தருவிக்கப்பட்டனவோ, அதை விட அவசரமாக இந்த வாதங்களுக்கு மருந்து காணவேண்டும்!

எங்கள் அரசாங்கம் அதைக் கண்டு தருமா?



விறகு வெட்டியாய் பிறந்தவர் [8-ம் பக்கம்]




'வானுலக இளவரசி' [3-ம் பக்கம்]


'புதினம்' அடுத்த இதழ்

சித்திரைச் சிறப்பிதழ்

○ வரதர் ○ மாயாவி ○ மகாகவி
○ ஜோ. ஏ. எம். தாஸ் ○ ரமணன்
● ராஜபாரதி

மற்றும் பல சிறந்த எழுத்தாளர்களின்
அருமையான எழுத்தோவியங்கள்!

● சிரிக்கவும், சிந்திக்கவும் சுவையான பல செய்திகள்!
● கவர்ச்சிகரமான வண்ணமுகப்பு!

அதிகபக்கங்கள்! விலை 20 சதம் மட்டுமே

உங்கள் பிரதிக்கு இப்பொழுதே சொல்லிவையுங்கள்!

அடுத்த இதழில்
'இன்று நீ வாழ்ந்திருந்தால் ....'
'வரதர்' எழுதும் சிறுகதை,
அடுத்த இதழ்:
சித்திரைச் சிறப்பிதழ்!

கவனியுங்கள்!
கோழிப் பண்ணையாளர்களே!
நேரடியாகத்தருவிக்கப்பட்ட குஞ்சு பொரிக்கும் யந்திரம் வந்துவிட்டது!
உங்கள் தேவைகள் அனைத்தையும் வசதியாக ஓரே இடத்தில் பெறலாம்.
- உடன் யாழ் குஞ்சுகள்
- பொடி குஞ்சுத்தீன்
- வளரும் குஞ்சுத்தீன்
- அதிக மூட்டையிடும் தீன் வகைகள் யாவும் கிடைக்கும்,

ஆலோசனைகள் இலவசம்!
டெலிபோனிலும் விபரங்கள் அறியலாம்.
கோழிப் பண்ணைக் கூட்டு ஸ்தாபனம்
உரிமையாளர்.-
சு, சத்தியலிங்கம்
3, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7170

ஆனந்தா லேகியம்

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா டிரேட் மார்க் 174, SEA STREET, COLOMBO 11

இந்த டிரேட் மார்க்கைப் பார்த்தே வாங்கவேண்டும். பாவித்தவர்கள் பலன் கண்டு தந்துள்ள நற்சாட்சிக்கடிதங்களையும் நமது மருந்து சாப்புக்கு நேரில் வந்து பார்ப்பது நல்லது.

ஆனந்தா லேகியத்தைச் சில காலம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலையும், மலஜலம் நாள்தோறும் சுகமாகக்கழியும்; இன்னும் பசியின்மை, சோம்பல், அஜீரணம், வாய்வுக் கோளாறுகள், சகல விதமான வலிகள், எரிவுகள் எல்லாம் தீரும்.

பெரியவர்கள் சிறியவர்கள் எல்லோரும் சாப்பிடலாம்.
பத்தியம் இல்லை.
முழு விபரம் அறிய பெரிய கட்லாக்குக்கு எழுதுங்கள்.

ஆனந்தா லேகியம்
பெரியது ரூபா 5-75
சிறியது ரூபா 3-00
ஆனந்தா வைத்தியசாலை
174, செட்டியார் தெரு,
கொழும்பு-11

# திரை மறைவில்

## வாழைப்பழக்கடைக்குள் சிங்கள ஆசிரியர்

இலங்கை 'அரை—அரசாங்கப் பகுதி' ஒன்றில் வேலை செய்யும் ஒரு தமிழ் உத்தியோகத்தர் தமது சம்பள உயர்வு தடைப்படுவதையும் பொருட்படுத்தாது, சிங்களம் படிக்க மறுத்த செய்தியை முன்பு எழுதியிருந்தேனல்லவா? அதே கையினால்தான் இதையும் எழுதுகிறேன்:

தமிழ் மொழிக்காக முஷ்டியை உயர்த்துகின்ற ஒரு பிரபல தமிழ்த்தலைவரின் பிள்ளைகள் சிங்களத்தை விழுந்து விழுந்து படித்தார்கள். பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு வாழைப்பழக்கடையில் குடியிருக்கும் ஒரு 'ஆசிரிய'ரை இவர்களுடைய மோட்டார் வந்து ஒழுங்காக அழைத்துச் செல்வது அந்தப் பக்கத்தில் பகிரங்க இரகசியம்! ஈ. என் தொடரிலக்கம் கொண்ட அந்த மோட்டார் வண்டியின் நம்பரும், அந்த 'ஆசிரிய'ரின் பெயரும் கூட என்னிடம் இருக்கின்றன. அந்தப் பிள்ளைகளின் தகப்பனாருடைய பெயர் கூடவா உங்களுக்குத் தெரியாது?

## மக்கள் வங்கி யாழ்ப்பாணம் வருமா?

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு வங்கியை மக்கள் வங்கியிடம் ஒப்படைப்பதற்கு இடையூறு'யிருக்கும் அந்தப் பெரிய தலைகள் யார்?

யாழ்—கூட்டுறவு வங்கியின் டைரக்டர்களும், அங்கத்தவர்களும் அதை மக்கள் வங்கியிடம் ஒப்படைப்பதற்கு விருப்பம் தெரிவித்த போதிலும் அதற்கு முட்டுக்கட்டை போடும் நோக்கத்தோடு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு இலாக்காவில் உயர்ந்த பதவி வகிக்கும் தலைவர்கள் சிலர் இயக்கம் ஒன்றை அமுல் நடத்தி வருவது உண்மையா?

## வானொலியில் கோளாறு!

முதலாளி தொழிலாளி உறவுகள் எவ்விதம் அமைய வேண்டும் என்று சமீபத்தில் தனிப்பட்ட வர்த்தகர் களுக்கு ஆலோசனை கூறிய இலங்கை வானொலி டைரக்டர் ஜெனரல் திரு. ஹெனி டிமெல், தமக்கும் தமக்குக் கீழுள்ள அதிகாரிகளுக்கும் இடையே உள்ள உறவைப் பலப்படுத்த முடியாமற் போனது ஏனோ?

### பயமுறுத்தல்

திரு. டீ. மெல்லை கடந்த மார்ச் 28ம் திகதி இரவு இரண்டு அதிகாரிகள் பயமுறுத்தினார்கள் என்று கறுவாக்காடு போலீஸ் நிலயத்தில் இவர் சென்று புகார் செய்தது வாசகர்கள் அறிந்ததே.

### குருகேக்கு கல்தா

இலங்கை வானொலி தேசிய சேவை தற்காலிக டைரக்டர் திரு. டி. ரி. எல். குருகே உடனடியாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார். கல்வி ஒலிபரப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி, திரு. டீ. மெல்லின் புகார் சம்பந்தமாக நடத்திய விசாரணையின் பலன்தான் இந்த நடவடிக்கையாகும்.

### பழைய கதை

திரு. குருகே வசித்துதந்த பதவிக்கு உரிய தராதரம் ஓனேஸ் பட்டமாகும். திரு. குருகே ஒரு பட்டதாரியல்ல. 1956ல் சிங்கள நிகழ்ச்சி அதிகாரியாகச் சேர்ந்த இவர் எப்படி இந்த உயர் பதவியை எட்டிப் பிடித்தார் என்பதே மர்மம் நிறைந்தகதை.

### அடுத்தவர் யார்?

பொலீஸில் செய்யப்பட்ட புகாரின்படி திரு. டீ. மெல்லைப் பயமுறுத்தியவர்கள் இரண்டு அதிகாரிகள். இதுபற்றிப் பொலீஸார் புலன் விசாரித்துவரும் நேரத்தில் திரு. குருகே மீது இலாக்கா நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. அடுத்த நபர் யார்? பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஒலிவரா கொக்கா!

உலக மாஜி இணுராவ வீரர்களின் சம்மேளனம் ஒன்று பாரிஸ் நகரில் இருந்து வருகிறது.

இந்தச் சம்மேளனத்தின் தலைமைப் பீடத்தில் கடந்த இரண்டு வருடகாலமாக சேர் ஒலிவரின் முன்னாள் மெய்க்காவலர் ஒருவர் அங்கம் வகித்துவருகிறார்.

இந்தச் சம்மேளனத்தில் ஒலிவருக்கு இருக்கும் செல்வாக்குக்கு இது ஒரு அத்தாட்சி என்று கருதப்படுகிறது.

சமீபத்தில் இந்தச் சம்மேளனத்துக்கு ஆசிய நாடுகளின் பிரதி நிதியாக இலங்கையர் ஒருவரே தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்! பெரிய பெரிய ஆசிய நாடுகளுக்கெல்லாம்கிடைக்காத இந்த 'சான்ஸ்' இலங்கைக்கு மட்டுமே எப்படிக் கிடைத்தது?

இலங்கையிலிருந்து சமீபத்தில் வெளியேறிய சேர் ஒலிவர் முதன் முதலில் பாரிசில்தான் போய் இறங்கினார் என்பதைக் கவனிக்கும் போது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடலாம் போலத் தெரிகிறதல்லவா?

ஒலிவர் லேசான ஆளல்ல! — 'அம்பலத்துறைவோன்'

வாருங்கள்,
அருந்தி மகிழுங்கள்
★ குளிர் பானங்கள்!
- கேக், பிஸ்கட், மஸ்கற், சர்பத் வகைகள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்
- உங்களை மகிழ்விப்பதே எங்கள் சேவை
சிவசக்தி
கூல் பார்
58, பெரியகடை
யாழ்ப்பாணம்


அரிசி மில்
மாவு மில்
சீயக்காய் மெஷின்
தண்ணீர்பம்களும்
இவற்றின்
பாகங்களும்
கிடைக்குமிடம்
ராஜு ஸ்ரோர்ஸ்
2/B, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம் (இலங்கை)

மங்கையர் அணியும்
தங்க நகைகள்

★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்
பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

- விளம்பர போர்டுகள்
- சினிமா சிலைடுகள்
- புளொக்குகள்
- வான் பெயின்ரிங்ஸ்
மற்றும் சித்திர வேலைகளும்
திறமாகவும் சகாயமாகவும் செய்துதர
ஓவியர் க. பத்மா,
95/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் இளம்பிள்ளைவாதநோய் விரைவாகப் பரவிக்கொண்டு வருவதும் அதைத்தடுத்து நிறுத்த சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரம்மப்பிரயத்தனம் செய்துவருவதும் அறிந்ததே. இந்நோய் வடபகுதிக்கும் வந்து சேர்ந்துவிட்டது.

இந்நோய் மற்ற நோய்களைக்காட்டிலும் மிகவும் பயங்கரமானது. இந்நோய் எப்படி உண்டாகிறது. இதைத்தடுப்பது எவ்விதம் என்பன போன்ற விபரங்களை மக்கள் அறிந்திருந்தால் நோய் மேலும் பரவாது தடுப்பதற்கு வசதியாயிருக்கும் என்ற நோக்கத்தோடு டாக்டர் செ. சிவஞானசுந்தரம் M. B. B. S. (M. O. H.) யாழ்ப்பாணம், பிரபல டாக்டர் ஸி. குருசாமி F. R. C. S. (London) ஆகியோரை 'புதினம்' நிருபர் பேட்டி கண்டு சேகரித்த தகவல்களை விபரிக்கிறது இக் கட்டுரை.

# அபாயம்! இளம்பிள்ளை வாத நோய்!

## எப்படி வரும்? என்ன செய்யலாம்?

## பிரபல டாக்டர்களின் அபிப்பிராயம்!

இளம் பிள்ளை வாதநோய்க்கும் சாதாரண வாதத்துக்கும் எவ்விததொடர்புமில்லை, இளம்பிள்ளைவாதம் மிகப்பயங்கரமான ஒரு தொற்றுநோய் சாதாரண வாதம் தொற்றக் கூடிய நோயல்ல. இந்நோய் பல நூற்றுண்டு காலமாக இருந்து வருகிறது, இதனுல் பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்தவர்கள் தம் வாழ்க்கை முழுவதும் அங்கவீனர்களாகக் காலம் கழிக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

இந்த நோயை ஆங்கிலத்தில் 'போலியோமைற்றிஸ்' என்று கூறுவர். இது பெரும்பாலும் சிறு பிள்ளைகளுக்கே ஏற்படுகிறது. பத்துசதவீதம் ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் இந்நோய் பாதிக்கிறது. இந்நோய்க்கிருமிகள் தொண்டைக்குழாய் மூலமும் சுவாசக்குழாய் மூலமும் உடலிற் சென்று கலக்கிறது. நன்றுக வேகாத, அழுகிய பதார்த்தங்களை உண்பதாலும் இந்நோய் உண்டாகக் கூடும்.

இந்த நோய் அநேகமாக குளிர்ந்த பிரதேசங்களில்தான் தோன்றுகிறது. நியூசிலாந்து, அவுஸ்திரேலியாபோன்ற இடங்கள்தான் இந்நோயின் இருப்பிடம். பூமத்திய ரேகைக்கு அடுத்துள்ள பகுதிகளிலும் இந்த நோய் தோன்றலாம். இந்த நோய்க்கிருமிகள் குளிரான பிரதேசங்களில் மட்டுமே உயிர்வாழக்கூடியனவாயிருப்பதே இதற்குக் காரணம். உஷ்ணத்தைத் தாங்கும் சக்தி இவைகளுக்கு இல்லாததால் சூரியன் செங்குத்தாகத் தோன்றும் நாடுகளில் இந்நோயைக் காண்பது அரிது. குளிரினுல் கிருமிகள் மிக வேகமாகப் பெருகுவதால் மேல் நாடுகளில் பெரியவர்களைக் கூட இந்நோய் பாதிப்பதுண்டு.

### நோயின் அறிகுறிகள்

இந்த நோய் தொற்றிக்கொண்டவுடன் மெல்லிய காய்ச்சல், உடல் அலுப்பு, தலையிடி, மலச்சிக்கல், பலவீனம், ஆகியன தோன்றும். அவற்றைத்தொடர்ந்துகடுமையான தலையிடி, கழுத்துநோ, முதுகுவலி ஏற்படும். பின்னுல்—காய்ச்சல் தொடங்கி ஒரு வாரத்தில் கால், அல்லது கை, அல்லது இரண்டும் பாரிசவாத நோய்க்குள்ளாகிவிடும்,

குழந்தைகள் தமது அங்கங்கள் நோகின்றன என்று கூறியதும் பெற்றோர் அந்த இடங்களை உருவிவிடுகின்றனர். இப்படி அவர்கள் செய்வதால்குழந்தையின் நிலை ஆபத்தானதாகிவிடுகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட அங்கம் சிறிது அசைந்தால் போதும் நோய் உடல் பூராவும் விரைவாகப்பரவிவிடும். ஆகவே நோய் தொடங்கியதும் குளிர்பிடிக்காதவாறு பாதிக்கப்பட்ட அங்கத்தை, பஞ்சு வைத்து கம்பளியால் சுற்றிக் கட்டிவிடவேண்டும். இது நோய் மற்ற இடங்களுக்குத்தாவாமல் பார்த்துக்கொள்ளும் முதல் நடவடிக்கையே அல்லாது நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை அல்ல. குழந்தையின் உடலை ஆட்டி அலைக்காமல் உடனே டாக்டர்களிடம் காட்டவேண்டும்.

### பாதுகாப்பு

இளம் பிள்ளை வாதநோய்க் கிருமிகள் நோயாளியின் உமிழ் நீரிலும், சலத்திலும், மூச்சிலும் இருக்கும். ஆகவே இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அருகே மற்றப் பிள்ளைகளையோ, பலவீனமான பெரியவர்களையோ செல்லவிடக்கூடாது.

ஐஸ்கிறீம் போன்ற குளிர்ந்த பதார்த்தங்களை கண்டபடி சிறுவர்கள் உண்ணவிடக்கூடாது. இவைகளாலும் இளம்பிள்ளை வாதம் பற்றிக் கொள்ளக் கூடும்.

### நோயைத் தடுக்கும் முறை

உணவு உண்பதற்கு முன்பும், மலகூடம் பாவித்தபின்பும் கைகளைச் சவர்க்காரம் போட்டு கழுவவேண்டும்.


உணவில் ஈக்கள் விழாதுபார்த்துக் கொள்ளல் வேண்டும்.

சன நெருக்கடியுள்ள இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இந்நாட்களில் காய்ச்சல் வந்தால் பூரண ஓய்வு எடுக்க வேண்டும். ஓய்வினுல் சிறு பிள்ளை வாதத்தை ஓரளவு தவிர்க்கலாம்.

### சிகிச்சை

இந்நோயைத் தடுப்பதற்கு 'சபின்வக்ஸீன்' என்ற மருந்து மிகவும் பிரயோசனமானது. இம் மருந்தை மூன்று மாதக் குழந்தையிலிருந்து 12 வயதுச் சிறுவர்கள்வரை கொடுக்கிறார்கள். உருண்டை வடிவாக உள்ள இம் மாத்திரை இனிப்புள்ளதாக இருப்பதால் குழந்தைகள் மிகவும் விரும்பிச் சாப்பிடுவார்கள். யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் இரண்டாயிரம் பேர்களுக்கு இம்மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அப்துல்லா & கோ

அனுமதிபெற்ற

கண் பரிசோதகர்

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 486


சங்கீதப் பிரியர்களை பயித்தியமாக அடிக்கும்

# 'வானுலக இளவரசி'

## "காதலிக்க நேரமில்லை; கல்யாணக் கவலையில்லை!"

ஆயிரமாயிரம் உள்ளங்களை அலைக்கழிக்கும் ஒரு யுவதி தனக்கென லட்சக் கணக்கான 'விசிறி'களைச் சம்பாதித்துக்கொண்டவள் — காதலை அறியாதவளாயும், கல்யாணத்தில் நாட்டம் இல்லாதவளாயும் இருக்கிறுள் என்றுல் உண்மையில் அது ஆச்சரியப்படத்தக்க விஷயமேயல்லவா?

டெலிவிஷன் உலகிலே அதிகச்சம்பளம் பெறும் பாடகியும் விசிறிகளால் 'வானுலக இளவரசி' என்று போற்றப் படுபவளுமான அல்மா கோகான் என்பவளே அப்பெண்-தன்னை எல்லோரும் 'கோகி' என்று அழைப்பதையே தான் விரும்புவதாக இவள் கூறுகிறுள்.

இவளை மணம்புரிய எத்தனையோ கோடீஸ்வரர்கள் தவங்கிடக்கிறார்கள். ஆனுல் இவள் யாருக்கும் 'தலை அசைக்க' மறுத்துவருகிறுள்.

இவளுக்கு இப்பொழுது 26 வயதாகிறது.

மேடையில் முதன் முதல் ஏறும்போது இவள் பத்து வயதுச் சிறுமியாயிருந்தாள். அப்பொழுதெல்லாம் தனக்கு மிகவும் கூச்சமாயிருந்ததென்றும், எங்கே தன்னை ரசிகர்கள் மேடையை விட்டே ஓட்டிக் கலைத்து விடுவார்களோ என்று தான் பயந்ததாகவும்கூறும் 'கோகி' இன்று தான் இந்த நிலைக்கு உயரக் காரணமாயிருந்த தன் தாய்க்குத்தான் மிகவும் கடமைப்பட்டவள் என்று கூறுகிறுள்.

'உங்களது உடல் கொஞ்சம் கனமாக இருக்கிறதே, என்று நீங்கள் எப்பொழுதாவது கவலைப்பட்டதுண்டா?'

எனக்கு எப்பொழுதுமே அந்தக் கவலை இருந்ததில்லை. உடல் கனமாக இருக்கிறதே என்று கவலைப்படுவதைக் காட்டிலும் மனிதன் கவலைப்படுவதற்கு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன! என்று கூறுகிறார் 'கோகி'

இவர் உணவில் அதிக அக்கறை செலுத்துவதில்லையாம். பகலில் அதிகமாகச் சாப்பிடத் தனக்கு இஷ்டமில்லை என்று கூறும் கோகியிடம் சிகரெட்பிடிக்கும் பழக்கமும் குடிக்கும் பழக்கமும் இதுவரை ஏற்பட்டதில்லையாம்.

'விசிறி'களையெல்லாம் பைத்தியமாக அடிக்கும் இவளுக்குக் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லையாம்.

'கொள்கையளவில் நான் கல்யாணத்தை எதிர்க்கவில்லை. கல்யாணம் செய்யத்தான் வேண்டும். ஆனுல் தனிமையில் உட்கார்ந்து அதைப்பற்றிச் சிந்திக்க எனக்கு இன்னும் போதிய 'அவகாசம் கிடைக்கவில்லை' என்கிறார்.

பேர்னி லாஸரஸ், லயனல் பாட், காரிகிராண்ட். போன்ற கோடீஸ்வரர்களுடன் அடிக்கடி காணப்படும் 'கோகி' இவர்களெல்லாம் தமது நண்பர்கள் என்றும், ஒரு யுவதி ஒரு ஆண்மகனோடு சேர்ந்து காணப்பட்டால் இருவரையும் சேர்த்துக் கதை கட்டிவிடுவதுதான் உலகத்தின் வேலை என்றும் கூறுகிறார்.

✻ 'என் தங்கை' ✻ முழுப்போத்தல் விழுங்கி ✻ சினிமா பார்ப்பது நல்லதா? ✻ சாவித்திரி அழகா, சரோஜாதேவி அழகா? ✻ தமிழனின் தனிச் சொத்து ✻ யாழ்ப்பாணத்தில் திரைப்படத் தயாரிப்பு ✻ கத்தோலிக்கப் பெண்களும், முக்காடும்! ✻ 'கீ வி' என்றால் என்ன?

# கேள்வி-பதில்!

ரமணன்

செ. மகேந்திரன், நெடுந்தீவு

கே: மச்சான் .. மச்சான்... பாடசாலை அதிபருக்கு வால் பிடிக்கும் உம்மை எப்படி அழைக்கலாம் சொல்லு மச்சான்.

ப: மச்சான் முறைபேசி எனக்கு வால்பிடிக்கும் உம்மை எப்படி அழைக்கலாம் என்று சிந்திக்க முதலில் அவகாசம் கொடும்.

கு. ரத்தினசிங்கம், கொழும்பு

கே: எம் ஜி, ஆர் நடித்த படங்களில் உங்கள் மனதைக் கவர்ந்தது எது?

ப: 'என் தங்கை'

க. சுப்பிரமணியம் காரைநகர்

கே: மனிதன் பணத்தையோ அல்லது வேறு பொருட்களையோ பாதுகாக்குமளவு தன் மனதைப் பாதுகாப்பதில்லையே! ஏன்?

ப: இகலோக வாழ்வுக்கு பணம் இன்றியமையாதது. அதனால்தான் பணத்தைக் கட்டிக் காக்க முயலுகிறான் மனிதன். பணத்தையும், பொருட்களையும் பாதுகாப்பவனால், மனதைப் பாதுகாக்க முடியாது?

எஸ். ராஜேஸ்வரி திருமலை

கே:- தங்களுக்கு பிடித்த நடிகை யார்?

ப:- ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா!

கே:- ஈழத்தின் பிரபல எழுத்தாளர் ஒருவர் முழுப்போத்தல் விழுங்கியாமே?

ப: ஏன், நீர் அவரைப் பிடித்து விழுங்கப் பார்க்கிறீர்?

கே-: சினிமாப் பார்ப்பதனால் அறிவு வளருமா?

ப:- வளராமல் இருக்க முடியுமா? இல்லையானால் பிரபல எழுத்தாளர், கனக செந்திநாதன் ஒருபடம் கூடத்தவறாமல் பார்த்துக்கொண்டிருப்பாரா?

ஓ. ரட்னேஸ்வரி
கொழும்பு 10

கே:- இன்றைய தமிழ்சினிமா உலகம் எப்படி இருக்கிறது?

ப:- கடைந்தெடுத்த போக்கிரிகளின் இருப்பிடமாகத் திகழ்கிறது. பெரும் துணிச்சலுடன் புரட்சிசெய்து எடுப்பதாகத் தம்பட்டமடித்துக் கொண்டு கேவலம், வெறும் துணிச்சலுடன் ஏழை எழுத்தாளர்களின் படைப்புக்களையெல்லாம் திருடும் "வெற்றிப்பட டைரக்டர்களும்" புதுமை விரும்பும் கதாசிரியர்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள்! ஆனால் ஒன்றை மட்டும் அவர்கள் மறக்கக் கூடாது இருபது நாளில் படமெடுத்தாலென்ன, இருபது மணித்தியாலத்தில் படமெடுத்தாலென்ன, ஒரு நாளும் உலகை ஏமாற்ற முடியாது! என்றைக்காவது ஒரு நாள் இவர்களது "வெற்றியின் ரகசியம்" அம்பலமாகியே தீரும்!

## பரிசுக் கேள்வி

எல். விஜய ராகவன்,
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

கே: 'கிவி' என்றால் என்ன?

ப: நியுசிலாந்து கரையோரங்களிலே வசிக்குமோர் பறவையின் பெயரிது! ஆனால் எல்லாப் பறவைகளையும் போல் இது ஓர் சாதாரணப் பறவையல்ல! இப்பறவையால் நாயைப் போலவும் பூனையைப்போலவும் சத்தம் போடவும் முடியுமாம்! இத்தனைக்கும் இது ஓர் கோழிக்குஞ்சு 'சைஸ்' தான்.

கே:- சாவித்திரியா, சரோஜாதேவியா அழகானவர்?

ப:- அது அவர்கள் போடும் பவுடரைப் பொறுத்தது!

இ.சி. சுப்பிரமணியம் சுழிபுரம்

கே:- தற்கால மாணவர்களிடம் அதிகமாக காணப்படும் புத்தகங்களெவை?

ப:- காதல்கதைகளும், துப்பறியும் கொலைகளும் தான்!

யோ. அமலதாஸ், திருமலை.

கே: தமிழனின் தனிச் சொத்து எது?

ப: வாய் வீரம்.

மு. பீற்றர், திருநெல்வேலி

கே: நான் ஒருபெண்ணுடன் நெருங்கிப் பழகுகிறேன்! அவளோ எல்லா ஆண்களுடனும் சரளமாகப் பழகுகிறாள்! கேட்டால் சகோதரவாஞ்சையாம்! இது உண்மை தானா?

ப: நீர் எந்த நூற்றாண்டில் ஐயா வாழ்கிறீர்? இது இருபதாம் நூற்றாண்டு! அன்புக்கும், ஆசைக்கும் வித்தியாசம் அறியா மானிடரே! உடனடியாக உம்மை மாற்றிக்கொள்ளும். பத்தாம் நூற்றாண்டு மனிதராக ஒருபோதும் இருபதாம் நூற்றாண்டில் வாழமுடியாது!

க. கௌரிதேவி, கொடிகாமம்

கே: ஒரு பெண் ஓர் ஆணைப் பார்த்தால் அதன் அர்த்தம் என்ன?

ப: ஆணின் பொக்கெற்றில் இருக்கும் 'மணிப் பர்ஸ்' வெளியில் தெரிகிறதென்று அர்த்தம்!

க. இரத்தினசிங்கம்,
இளிநொச்சி,

கே: சிறந்த வானொலி நாடகங்கள் நடத்துவதற்கான ஓர் போட்டியை நடத்தினால் "நடமாடிக்கா" அல்லது ஜாவலன் வாஸுக்கா பரிசு கொடுப்பீர்கள்?

ப: பரிசைப் பகிர்ந்து இருவருக்கும் கொடுப்பேன்.

கலையரசன், பண்டத்தரிப்பு.

கே: யாழ்ப்பாணத்தில் திரைப்படம் தயாரிக்கிறார்களாமே?

ப: மிகவும் சந்தோஷம்! ஆனலொன்று, அவர்கள்படம் தயாரிப்பதுடன் நின்றுவிட வேண்டும். வேறு ஒன்றையும் தயாரிக்கக் கூடாது.

எம். இராசையா,
கொழும்பு—16

கே:- க.நா. சுப்பிரமணியமா அல்லது சி.சு. செல்லப்பாவா சிறந்த விமர்சகர்?

ப:- இருவரும் அருகருகே நிற்கும் பொழுது ஓர் பையன் போய் "ஐயா! இரண்டும் இரண்டும் எவ்வளவு?" எனக் கேட்டால், உடனே க.நா.சு. "தம்பி எட்டிலிருந்து நாலைக்கழி மறுமொழி வரும்" என்பார். அதைக் கேட்ட சி. சு. செ. உடனடியாக 'ஐயோ! ஐயோ! க. ந. சு. எவ்வளவோ பிழையாகப் பதில் கூறிவிட்டார்!... தம்பி! இது இல்லையடா விடை! இருபத்தினலை ஆறால் பிரித்தால்தால் இரண்டும் இரண்டும் எவ்வளவென அறியலாம்! எனக்கூறுவார்! ஆனால் ஒருவரும் இரண்டும் இரண்டும் நாலு என்று கூற மாட்டார்கள்! அப்படிச் சுலபமாகக் கூறினால்தானே அவர்களின் கௌரவம் குறைந்து போய்விடும்.

கே. செல்வநாதன்
கொழும்பு 6

கே:- ஐயா, ரமணரே, உமது பதில்கள் நன்றாக இருந்தாலும் அவ்வளவு திறமையாக இல்லை. என்னிடம் பதில் கொடுக்கும் வேலையைத் தந்து பாருமேன்!

ப:- உமது பதில்கள் திறமையாக இருந்தாலும் நன்றாக இல்லா விட்டால் பயனில்லையே!

பாக்கிய அன்ரன்,
யாழ்ப்பாணம்

கே:- சில மனிதர்கள் பொலிடோல் குடித்துச் சாகிறார்களே, இவர்கள் மீது அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை?

ப-: ஏன் இல்லை? இந்த அரசாங்கத்திலல்ல; 'மேலே' உள்ள அரசாங்கத்தில் நீதிபதி யமதர்மரின் முன்பாக இந்தப் 'பாவி'கள் படும்பாட்டை நீர் போய் பார்க்கவிரும்புகிறீரா!

# மலாயாவில் பழங்குடிமக்கள் விசித்திரம் நிறைந்த திருமண நிகழ்ச்சிகள்!

கீழ்த்திசை நாடுகளில் செல்வச் செழிப்பாலும், நாகரிகத்தாலும் மிகவும் முன்னிலையிலுள்ள மலாயா நாட்டில் சீர்திருத்தமடையாத பழங்குடி மக்கள் சுமார் 53 ஆயிரம்பேர் இன்னும் வசித்து வருகிறார்கள்! மிகவும் பிற்போக்கான நிலையிலுள்ள இந்த மக்கள், முக்கியமாக 'நெக்ரிட்டோ, செனாய், பழங்குடி மலாயக்காரர் என்று மூன்று பிரிவினராக உள்ளனர். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் மிக விசித்திரமானவை!

இக்குடி மக்களுள் வயது வந்த ஒரு வாலிபன் திருமணம் செய்வதென்பது அவ்வளவு லேசான காரியமல்ல. பெரியப்பா, சிற்றப்பா, மாமி ஆகியோருடைய பெண் பிள்ளைகளை அவன் திருமணம் செய்ய முடியாது. செனாய் வகுப்பினரிடையே ஒரு அண்ணனும் தம்பியும், இன்னொரு பிரிவிலுள்ள பெண்ணையும் அவள் தங்கையையுமே திருமணம் செய்யவேண்டும்

நெக்ரிட்டோ வகுப்புக் காதலர்கள் தங்களுடைய பெற்றோர்களின் சம்மதத்தோடு தங்களுக்கென ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ள வேண்டும். அதுவே அவர்களுடைய திருமணமாக கருதப்படும்.

செனாய் வகுப்பு வாலிபன் திருமணம் செய்வதற்கு இரு வழிகள் உண்டு. பெண்ணின் பெற்றோர்களுக்கு பலவித உதவிகளையும் செய்து அவர்களைத் திருப்தி செய்தால் திருமணம் நடைபெறும். மற்றொரு வழி விசித்திரமானது வாலிபன் தனது காதலியுடன் தனியாக ஒரு இரவு தங்கவேண்டும்: அடுத்த நாள் காலையில் அவர்கள் இருவருடைய நெற்றிகளிலும், இரத்தம் வரும்படியாக நகத்தினால் கிள்ளப்பட்ட காயங்களைக் கண்டால் இருவருக்கும் பரஸ்பரம் விருப்பம் என்பதை அறிந்து திருமணம் செய்து வைக்கப்படும். வாலிபனுடைய நெற்றியில் காயம் இல்லாவிட்டால், பெண்ணுக்கு இஷ்டமில்லையென்றும் பெண்ணுடைய நெற்றியில் காயம் இல்லாவிட்டால் வாலிபனுக்கு இஷ்டமில்லையென்றும் கருதப்படும். திருமணம் நடைபெறாது.

திருமண விழாக்கள் ஒரு இரவு முழுவதும் விருந்தும் நடனமுமாக ஒரே கொண்டாட்டமாக இருக்கும்.

நன்றாகச் சமைக்கத் தெரிந்த பெண்களையே ஒரு வாலிபன் விரும்பித் தெரிவு செய்வான். நாகரிகமடைந்த மலாய்க்காரர் பல பெண்களைத் திருமணம் செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது ஆனால் இந்தப் பழங்குடி மக்களிடம் ஏகதாரமுறையே காணப்படுகிறது. மனைவி ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டாளானால் பிறகு அவளை விவாகரத்துச் செய்ய முடியாது. ஆனால் இரண்டு ஆடவர்கள் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மனைவிமார்களை மாற்றிக்கொள்ளும் வழக்கம் இவர்களிடம் உண்டு!

'மா - மெரி' என்ற வகுப்பினரிடையே, இன்னொரு விதமான விசித்திர வழக்கமூண்டு, அவர்களின் தலைவன் களிமண்ணினால் எறும்புப் புற்றுப்போலச் செய்து அதைப் பூக்களினால் அலங்கரித்து வைப்பான். மணப்பெண் அந்த எறும்புப் புற்றைச் சுற்றி ஓட வேண்டும். அவள் ஏழு முறை சுற்றுவதற்குள் மணமகன் அவளைத் துரத்திப் பிடித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குப் பெண் கிடைக்க மாட்டாள். ஆனால் மணமகன் தன்னைப் பிடிக்கட்டும் என்ற கருத்தினால் மணமகள் மெதுவாகவே ஓடிக்கொண்டிருப்பாளாம்!

'மில்க்வைற் நீல சோப்'
ஒன்றே
உங்கள் சலவை வேலையை
பூர்த்தி செய்கிறது.



## மலரும் கல்லும்.

நாயின் வேலையைக் கழுதை செய்தால் அடிவாங்கிச் சாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த கதை, இது தெரியாமல் எல்லோரும் எல்லா வேலையும் செய்யலாம் என்ற மனப்பான்மை தற்போது அதிகரித்து வருகிறது. முட்டாள், கொத்தனார் வேலை பார்ப்பதும்; தொண்டர் தலைவர்போல் கட்டளையிடுதலும், எழுத்தாளர் பத்திரிகை ஆசிரியராகி பத்திரிகை வெளியிட்டு, இருந்த இடமே தெரியாமல் மறைவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. அவரவர் அந்தந்த இடத்தில் இருந்து தத்தமக்குத் தெரிந்த துறையில் முன்னேறினால்தான் எல்லோருக்கும் நல்லது. மாறிக் காரியங்கள் செய்தால்......... இந்தஉருவகக் கதையை வாசியுங்கள். பின் சிந்தித்துப்பாருங்கள்.

ஒரு தடவை மலர் தன் மனதிற்குள் "நாமே ஏன் எப்பொழுதும் கல்லைப் பூசை செய்யவேண்டும். இது என்ன நியாயம்?' என்று நினைத்தது. இதை அறிந்த இயற்கை "பூவே! உனக்குக் கல்லைப் பூசை செய்ய விருப்பமில்லாவிட்டல் விட்டு விடு. இன்று முதல் கல் உன்னைப் பூசை செய்யும், எப்படியாவது பூசை நடந்தாக வேண்டும் அல்லவா? பூசையில்லாமல் எப்படி உலகம் நடக்கும்?" என்று கூறியது. மறுநாள் இயற்கை கூறியபடி மலரைப் பூசை செய்வதற்காக கல் வந்தது. ஆனல் கல் தன்னை அர்ப்பணம் செய்யத் தொடங்கியவுடன் மலருக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது மலரின் இதழ்கள் தவிடு பொடியாயின. மலர் நடுங்கிக் கொண்டே இயற்கையிடம் ஓடியது. "தேவி, என்னைக் கல் பூசை செய்யவேண்டாம். பூசையை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் பிறரைப் பூசிப்பதுதான் நன்மை தரக்கூடியது" என்று கதறியது.

இந்த உருவகக்கதையுள் நான் சொன்ன கருத்து மாத்திரமல்ல, சூசகமான எத்தயோ கருத்துக்கள் அடங்கிக் கிடக்கின்றன. இந்த அரிய உருவக்கதை யாருடையது தெரியுமா? நாவலுலகில் தனக்கென ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்தியுள்ள காண்டேகருடையது.

## மாறிப் போட்ட மாலை

மலரைப் பற்றி நினைத்த போது அதனோடு தொடர்புடைய மாலைக்கதை ஒன்று ஞாபகத்துக்கு வந்தது, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற குறிக்கோளோடு இயங்கும் யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்

# 'பூதந்தேவனார்' அரங்கு

தமிழ் மன்றம் வெளியிட்டுள்ள இசைவிழாச் சிறப்பு மலரில்தான் அந்தக்கதை இருக்கிறது. 'சிவம்' என்பவர் விபுலானந்த சுவாமி அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரையில் இந்த நிகழ்ச்சியைச் சுவைபட எழுதியிருக்கிறார். அதைச் சுருக்கிக்கொடுத்திருக்கிறேன். வாசித்துப்பாருங்கள். "சுவாமி விபுலானந்தர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு வருவதாயறிந்து அவரை வரவேற்பதற்காகச் சிதம்பரம் றெயில்வே ஸ்ரேஷனுக்கு ஈழநாட்டிளைஞர் கழகத்தாரும் வேறு சிலரும் சென்றிருந்தோம். எங்கள் கூட்டத்தில் இரண்டு பேரது கையில் இரண்டு அழகான ரோஜா மாலைகள் இருந்தன. இரண்டும் அடிகளுக்காகவேதான்.

நடு நிசி கழித்து மணி இரண்டு இருக்கும். கர்ணகடூரமான 'கடபுடா' ஓசையோடு விரைந்து வந்தது போட்மெயில். இரண்டு நிமிஷம்தான் அது சிதம்பரத்தில் தங்கும். நாங்கள் அங்குமிங்கும் ஓடிச் சுவாமியவர்களைத்தேடினோம், அதோ ஒரு காவி—அவர்தானே? 'உமக்குச் சுவாமியை நல்லாய்த் தெரியுந்தானே' என்றார் ஆறுமுகத்தார். அதற்கிடையில் வேறுமொரு வெண் தலையும் காவியுடையும் பின்னே வந்தது. வண்டியிலிருந்து முதலாவது சுவாமி கீழே இறங்கக் கால் வைத்தாரோ இல்லையோ கீழே நின்ற நாங்கள் நாலைந்து அன்பர்கள் அவரைத்தாவிப் பிடித்துக் கொள்ள வித்துவான் சின்னத்துரை அவர்கள் மாலை சூட்டி இரண்டு தரம் கைதட்டியும் மகிழ்ந்தார். நாங்களும் ஆசாமியைப் பிடித்த பிடியைத் தளர்த்திக் கையைத் தட்டி மகிழ்ந்தோம்.

அதோ வேறொரு சாமி கீழேயிறங்கி வருகிறாரே! அடியேனுக்கு இதனிடையே கொஞ்சம் சந்தேகம் முளைத்துக் கிளைத்து வளர்ந்தே விட்டது. வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடந்த ஈழகேசரிச் சிறுவர் மகாநாட்டில் பார்த்த ஞாபகம் என்னை என்னவோ செய்தது. என்ன பேய்த்தனம் என்று சொல்லிக் கொண்டே முதலாவது சுவாமி கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்ற முனைந்த போது,— பாவம், சாமி தன் கையாலேயே மாலைகளைக் கழற்றிக் கையிலெடுத்து வித்துவானிடமே கொடுத்து. 'நானல்லச்சாமி; அதோ அவருக்குப் போடுமையா' என்றார். போடும் போடும் என்றன அநேகம் குரல்கள். இரண்டாவது சாமியோ (சுவாமி விபுலானந்தா அவர்கள்) வேண்டாம் அதற்கென்ன பரவாயில்லை என்றார், வித்துவான் முகத்தை மட்டுமா? எங்கள் முகத்தையும் அப்போது பார்க்க வேண்டுமே!

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற தமிழ் இசை விழாச் சிறப்பு மலர் விஷயச் செறிவுடனும் எழிமை கலந்த பொலிவுடனும் அழகுற அச்சிட்டு வெளிவந்திருக்கின்றது. வளர்க அவர்கள் தொண்டு!

## நங்கைக்கு நானூறு வாண வேடிக்கைக்கு இருநூறு; ஓதுவா மூர்த்திக்கு....

தமிழ் இசையைப் பற்றி அந்தமலரில் உள்ள கட்டுரையை வாசிக்கும்போது தமிழ்ப் பண்களை முறையாகப் படித்துக் கோவில் தொண்டு செய்யும் ஓதுவா மூர்த்திகளைப் பற்றிப் பத்து வருடத்துக்கு முன் ஒரு நூலில் வாசித்தது ஞாபகத்திற்கு வந்தது. அதிலுள்ளதை வாசித்தால் தமிழர் நெஞ்சம் குமுறும். சைவர் நெஞ்சு எரியும்.

"தேவாரத்திருமுறைகளைப் பயின்றவர்கள் ஓதுவார்கள் என்று ஒதுக்கப்பட்டுள்ளார்கள். இசைக்கலைக்கும் இவர்களுக்கும் எள்ளளவும் உறவில்லைப் போலும் என்று பொதுமக்கள் எண்ணத்தலைப்பட்டுவிட்டார்கள். தம்மைப் போற்றுவாரின்றி அவ்வோதுவா மூர்த்திகளும் ஒதுங்கிப் பிழைக்கின்றனர், வறுமையில் வாடி வதங்குகின்றனர். ஒளி குன்றி உடல் சாம்பி ஒடுங்குகின்றனர். அவர்கள் பாடும் பாட்டை அவர்களே கேட்டு மகிழவேண்டும்......... கற்றூண்களுக்கும், கருங் கதவுப் பூண்களுக்கும், கடந்த வெளிகளுக்கும் பாடிப்பாடிக் கலங்குகின்றனர். வேண்டுமானல் ஆண்டிகள் சிலர் அயர்ந்து வந்து அவர் அண்டையில் நிற்பர். பொருள்தெரியாமலே பாடல்களைப் பாடுகின்றனர், 'அரியானை அந்தணர் தம் சிந்தையானை" என்று பாடும் பொழுது, "இந்த யானை எந்தக் காட்டில் வாழுமோ? தெரியேனே" என்று ஏங்குவது போலத் தோற்றும். அந்தோ? அவர்களின் நிலை பரிதாபம்! பரிதாபம்! நெஞ்சு பொறுக்குதில்லையே! தமிழ் உலகமே நாணித்தலை குனிய வேண்டியதுதான்.

நாலைந்து தெலுங்குக் கீர்த்தனங்களையும், இந்துஸ்தானி மெட்டுக்களையும் சினிமாத் துக்கடாக்களையும் வைத்துக்கொண்டு மிகப்பலர் மேன்மையுறுகின்றனர் தமிழ்நாட்டில். பதக்கத்தில் மிதக்கின்றனர்; பொன்னில் பொலிகின்றனர். பூவிற் புரளுகின்றனர். நூற்றுக்கணக்கான தேவாரத் திருமுறைகளை ஓதுகின்ற உத்தமர்கள் கந்தையும் சப்பரையும் கண்டிகையுமே கண்ட கோலமாய்க் குழைந்து குமுறிக் குறைகின்றனர்.

ஒரு கோவிலின் திருவிழாச் செலவுக் கணக்கில் இருந்தது இது: நடனமாடிய நங்கைகு ரூபா நானூறு, வாணவேடிக்கைக்கு ரூபா இருநூறு, தேவாரம்பாடிய ஓதுவா மூர்த்திகளுக்கு இரண்டு கட்டி திருவமுதும் இரண்டரை அணவும், ஓதுவா மூர்த்திகளுக்கு ஏன் இந்த இழிவு? என்று வருந்தவேண்டியிருக்கிறது,

## சேர்ந்து பாடுவோம்

தமிழிசை சம்பந்தமாக அதிகம் உற்சாகம் காட்டிய தீரர் சத்தியமூர்த்தியின் அபிலாட்சை ஒன்றை உங்கள் காதில் போட்டுவைக்கிறேன் பிறகு உங்கள் விருப்பம்.

"என்னுடைய ஆசை நம் கச்சேரிகளில் கடைசியில் ஒரு பாட்டையாவது பாடகரும் கச்சேரிக்கு வந்திருக்கும் எல்லோரும்சேர்ந்துசந்தோஷமாகப்பாட வேண்டுமென்பது. இது துர்லபமான காரியமல்ல. ஆனல் சுலபமுமல்ல. ஆரம்பிக்கும் பொழுது இம்மாதிரிப் பாடுவது ஹாஸ்யத்தை உண்டாக்கலாம், ஆனல் சில வருடங்களுக்குப் பின் ஓரே பாட்டை அதுவும் சுலபமான பாட்டை எல்லாக் கச்சேரிகளிலும் எல்லாரும் சேர்ந்து பாடுவது வழக்கமாகிவிட்டால் இந்தச் சேர்ந்துபாடுதலை இனிமையாகச் செய்துவிடலாம். உதாரணமாகத் தமிழில் பாரதியாரின் ,'வாழிய செந்தமிழ்" பாடலாம், தெலுங்கில் ஜயர்வாள் மங்களத்தைப் பாடலாம். இப்படிப் பாடிக் கச்சேரிகளை மூடிப் போமேயானல் நம்முடைய கச்சேரிகள் தேசப் புனருத்தாரணத்தில் நாம் சரியான பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்துவிட முடியும்.

## பரிசு பெற்ற பாட்டு

சென்ற 11-8-62 இதழில் "காட்டுங்கள் உங்கள் கைவரிசையை" என்று கேட்டுக் "கங்கையும் காந்தியும்" என்ற தலைப்பும், பாடப்படும் விஷயமும்கொடுத்திருந்தேன். உண்மையாகப் பல கவிஞர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டனர். அவற்றில் பரிசு பெற்ற கவிதை கீழே வருகிறது, இதனைப் பாடியவர் ஈழத்தில் புகழ்பெற்று விளங்கும் கவிஞர் "இராஜபாரதி" பரிசுக்குத் தகுந்ததுதானா என நீங்களும் பாருங்கள்,

## கங்கையும் காந்தியும்

சிலேடையணி:

(1) உலகத்தின் மூகட்டிலேறி
உறையகம் கண்டதாலும்
நிலைபெறுந் துறைகள் வாரி
நிறைவளங் கண்டதாலும்
பலகலைக் களங்களாடிப்
பரிசுமிக் குயர்ந்த நாளும்
இளைபல தாங்கி நாடுங்
கேண்மையி னிறைந்ததாலும்
(2) வானிருந் திழிந்து போந்து
வையக மளந்ததாலும்
தேனிருந் தொழுகு பூவாந்
திசைமுக மலர்ந்த தாலும்
பேணுமுன் நெறிகள் மாந்திப்
பெருநிலை யடைந்த தாலும்
காணுநற் கருத்தினோர்க்குக்
காந்தியும் கங்கையாமே,

உவமையணி:

(3) இருபது நூறுகல்லுக்
கெழில்தருங் கங்கை மாதா
திருபதம் இரண்டும் நல்இத்
தேசத்தைக் காக்கு மாறே
உறுதுயர் அடிமை வாதை
ஓட்டியெம் நாட்டைக்காக்க
கருவதின் திருவாய் வந்த
காந்தியச் சேவை கண்டோம்

அடுத்தவாரம் இன்னொரு போட்டி நடாத்தப்போகிறேன். கைவரிசை காட்டக் காத்திருங்கள்.


கவலைவேண்டாம்
தேவையற்ற இடங்களில் உள்ள ரோமங்களைப் போக்க வேண்டுமா?
இதோ ரிஷிரோமசங்காரி!
இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.
விலை ரூபா 1-50 தபாற் செலவு சதம் 50
மொத்தவியாபாரிகளுக்கு தகுந்தகழிவு கொடுக்கப்படும்.

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார்தெரு, கொழும்பு.

* கடிதத்தைக் கிணற்றுக் கட்டிலே வைத்துப் பாரமும் வைத்து விட்டு, உடையை வரிந்து கட்டிக் கொண்டு கிணற்றுக் கட்டின் மேல் ஏறிவிட்டாள் லில்லி...
* காதலிலே தோல்வியுற்ற கன்னி, அந்த நள்ளிரவிலே தன் உயிரையே மாய்க்கத் துணிந்து விட்டாள். ஆனாலும்.........

# காதல் ஒழுங்கை

'மாலதி'

"இஞ்சே! உங்களைத்தான்: ஏனிப்படிக் கண்டதும் காணாததுமாப் போறீங்க?......?" ஆபீசிலிருந்து வந்துகொண்டிருந்த பாலச்சந்திரனை வழிமறித்து நின்றிருந்தாள் லில்லி. 'உங்களுக்குத் துணிவிருந்தா சைக்கிளை எனக்கு மேலால ஏத்திற்றுப் போங்க' என்பது போல வைராக்கியத்தோடு நின்றிருந்தாள் அவள். வேறு வழியேயில்லாது பிரேக்கை அழுத்திக் காலைக் குத்தினான் அவன்.

காதல் செய்ததால் ஒழுங்கை ஏற்பட்டதோ, ஒழுங்கைக்காகக் காதல் ஏற்பட்டதோ, எப்படியிருந்தாலும் மட்டு நகரில் இப்படியொரு 'காதல் ஒழுங்கை' இருக்கவே இருக்கிறது. கச்சேரியிலிருந்து திரும்பும் கிளறிக்கல் சேர்வண்ட் 'சந்திரன்', (இப்படித்தான் லில்லிஅழைப்பாள்) அந்த ஒழுங்கையைக் கடந்துதான் தன் வீட்டுக்குப் போகவேண்டும். அந்தக் காதல் ஒழுங்கையிலேதான் லில்லி வழிமறித்து நின்றிருந்தாள்.

"சந்திரன்! நீங்க என்ன நினைச்சிரிக்கிறீங்க; என்னைக்கண்டாலே இப்போதெல்லாம் முகத்தை ஏனிப்படி வச்சிரிக்கிறீங்க.........?" லில்லியின் தொண்டை கரகரத்தது.

"ஒண்டுமில்ல லில்லி. நான் அவசரமாப் போகனும்" மழுப்பினான் அவன்.

"போங்க, எனக்கு ரெண்டுல ஒண்டு சொல்லிற்றுப் போங்க, நான் சாகிறதா வாழுறதா? சொல்லுங்க சந்திரன்"

"இஞ்சே லில்லி! ஒழுங்கையில நிண்டு இப்படி ஒப்பாரிவைக்க என்ன நடந்துபோச்சி இப்ப? ஆரும் பார்த்தா என்ன நினைப்பாங்க. நீ போ. நான் பிறகு வாறன்."

"புறகு எப்ப? உங்கட மிஸிஸ்ஸோடயா?"

"லில்லி!......" கத்தினான் சந்திரன்.

அவள் ஒன்றும் பயப்படப் பச்சைக் குழந்தையல்ல.

"என்னை ஏமாத்தாதீங்க சந்திரன்! உங்க கலியாணத்துக்கு இன்னம் ரெண்டு நாளிருக்கு. நான் பச்சைக் குழந்தையல்ல சந்திரன்."

"நான் என்ன செய்யட்டும் லில்லி!" குரல் இறங்கியிருந்தது. கரகரத்தது. தலைகுனிந்தபடி நின்றிருந்தான்.

"நீங்க ஆம்பிளையில்லையா? உங்களுக்குத் துணிவில்லையா? இந்தக் கலியாணத்த நிறுத்தக் கூடாதா?"

'பெத்து வளத்து இத்தனை காலத்துக்கும் ஆளாக்கி நிமித்திவிட்ட அம்மாட சொல்லத்தட்டியா? தன்னந் தனியாகக் கூலிக்குக் குத்தி என்னைப்படிக்கவச்ச அம்மாட மனம் நோகவா?' தொண்டை வரை வந்த வார்த்தைகள் வெளிப்படவில்லை. வெளிப்பட்டிருந்தால் லில்லி எப்படி மாறுவாளோ? அந்த மௌனத்தால் இதை அளந்து விட்டவள் போல வாய் திறந்தாள் லில்லி:

"என்மனத்தை நினைச்சீங்களா சந்திரன்? பள்ளியில இருந்த எனக்கு ஆசை காட்டி, இத்தனைக்கும் வளர்த்து விட்ட அன்பை நினைச்சீங்களா சந்திரன்! கட்டுக்கட்டாக நீங்க எழுதிய கடிதங்களை நினைச்சீங்களா சந்திரன்?" லில்லியின் ரோஜாக் கன்னங்களிலே மாலைமாலையாக வடிந்தது கண்ணீர். மார்புச் சட்டையிலே பொட்டுப் பொட்டென்று சிந்தியது.

"அம்மாட்டச் சொல்லிப் பாத்த பிறகும் நான் என்னெய்யட்டும். நீ...நீ ... வேதக்காறியாம்........."

"வேதக்காறியா?.........."

பதில் சொல்ல இன்னும் சந்திரன் அங்கு நின்றிருக்கவில்லை,

"சந்திரன்! சந்திரன்! எனக்கேதாவது சொல்லிற்றுப் போங்க சந்திரன்! இல்லாட்டி நாளைக்கு விடிய என்ட சவத்தத்தான் காணுவீங்க சந்திரன்" லில்லியின் குரல் கேட்டதோ இல்லையோ, சந்திரன் மறைந்துவிட்டான். பெண்மையின் தவிப்பு ஈரமற்ற அந்தச் செவிகளுக்கு எட்டவேயில்லை. எட்டினாலும் இதயத்தைத் தொடவில்லை. தொட்டாலும் அவனால் எதுவும் செய்வதற்கில்லை. பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட அன்னைக்கு அவன் துரோகம் செய்யமுடியாது!

லில்லி செத்த பிணம் போல வீடு திரும்பினாள். அவள் ஒன்றும் பிச்சைக்காரியல்ல. முதலாளி யோன்பிள்ளைக்கும் திரேசாவுக்கும் ஒரேயொரு மகள். எஸ். எஸ். ஸி. படித்துவிட்டு கொமர்ஸியல் கல்லூரியில், ரைப்றைட்டிங்; சோட்கேண்ட்' படித்துக்கொண்டிருக்கிறாள். நான் நீயென்று அவளைக் கட்டிக்கொள்ளப் பெரிய இடத்து வாலிபர்கள் காத்துக்கிடக்கிறார்கள். ஆனால் லில்லியின் மனது சந்திரனிடம் பறிபோய்விட்ட பிறகு?

இரவு இரண்டு மணி. மெல்லக் கதவைத் திறந்துகொண்டு வெளிவந்தாள் லில்லி. கொப்பியை எடுத்து எதையோ எழுதிக் கிழித்து எடுத்தாள். பின் கட்டுக்கிணற்றை நோக்கி நடந்தாள். வளையல்களையும் மாலையையும் காதணிகளையும் களற்றினாள். காகிதத்தை கட்டிலிலே வைத்து அவற்றால் பாரமேற்றினாள். உடையை இறுக்கமாக வரிந்து கட்டினாள். கிணற்றுக் கட்டிலிலே கால்வைத்து ஏறியும் விட்டாள்............

மாமரத்துக் கிளையிலே தூங்கியிருந்த சேவற்கோழி என்ன கனாக் கண்டதோ, கூச்சலிட்டபடியே சடசடவென்று கிணற்றுள்ளே வீழ்ந்து தவண்டையடித்தது. சற்று நேரத்துக்கு அப்படியே நின்றிருந்தாள் அவள். சேவலின் சந்தடியும் அடங்கிற்று. "அது செத்தேயிருக்கும்" .........

அவள் இப்படி நினைத்தாள். சாவின் பயங்கரம் இப்போது புலனாயிற்று லில்லிக்கு.

எந்த ஜீவனும் உயிரைப்போக்க விரும்புவதில்லை. கடைசிவரை அது வாழத்தான் துடிக்கிறது. அரிது அரிது மானிடராதல் அரிது. சாகப்பிறந்தோமா? வாழப் பிறந்தோமா? சாகப்பிறந்தால், பிறந்த உடனே செத்திருக்கவேண்டுமே! வாழப் பிறந்தால், இன்பமோ துன்பமோ கடைசி வரை வாழ்ந்துதான் தீரவேண்டும்; எப்படியாவது வாழ்ந்துதான் தீரவேண்டும். பிறப்பின் கடமை அது. சாவுக்காக வாழவேண்டுமே தவிர வாழ்வுக்காகச் சாகக் கூடாது. அது கோழைத்தனம். காதல் பிறப்பது சாவுக்கல்ல, சாவையும் வென்றுவிட,!

திரும்பி இறங்கினாள். ஏதோ ஒரு முடிவோடு நடந்தாள் லில்லி.

அந்த வீட்டின் சாளரத்தினூடாக மெல்லிய வெளிச்சம் தெரிந்தது. நீக்கிவிட்டுத் தலையை நீட்டினாள் லில்லி. அடுத்த கணம் "சந்திரன்!.........என்று தன்னையறியாமலே அலறிவிட்டாள். அருகே படுத்திருந்த சந்திரனன் தாய் அலறிப்புடைத்துக்கொண்டு எழுந்தாள். சந்திரனின் கையிலிருந்த நச்சுத் திராவகம் மூலையிலே போய் விழுந்தது. ஒப்பாரிவைத்தபடியே கதவைத்திறந்த அவளின் காலிலே போய் விழுந்தாள் லில்லி'

"அவரின் உயிருக்கு ஏதாவதென்றால், எனக்கும் ஒரு துளி கொடம்மா!" என்று துடித்தாள்.

"லில்லி! நீ எங்கே வந்தாய்? ஏன் இப்படி ஒப்பாரி வைத்து ஊரை எழுப்புறீங்க?'

"நீங்க குடிக்கவேயில்லையா?"

"இல்லை........"

"அம்மா! நீங்கள் என்னைக்கொன்றாலும் நானுங்கள் மருமகளம்மா!"..........

லில்லியின் கண்ணீர் வென்றது. மெழுகாகிவிட்ட இதயத்தோடு — வாஞ்சையோடு மருமகளைத் தூக்கியணைத்தாள் அவன் தாய்.

அதிகாலை; கிணற்றுக்கட்டைப் பார்த்துவிட்டுத் தலையிலடித்துக்கொண்ட ஜோன்பிள்ளையின் பாதங்களிலே சந்திரன் — லில்லி தம்பதிகள் வீழ்ந்து வணங்கினர். மூலையிலிருந்த துப்பாக்கியைத் தூக்கி நீட்டிய ஜோன்பிள்ளையின் கைகள் செயலற்று ஓய்ந்தன. துவக்குக் குழலுக்கு முன்னே தன் நெஞ்சைக் கொடுத்து நின்றிருந்தாள் லில்லியின் அன்னை.

கிணற்றுளிருந்து யாரோ எடுத்துவிட, தன் நனைந்த செட்டைகளை உதறிக்கொண்டு கழுத்தை நீட்டி, "கொக்கரக்கோ" என்று சத்தம் போட்டுவிட்டு குப்பைமேட்டைநோக்கித் தாவிய சேவல், அந்தக் 'காதல் ஒழுங்கை' நெடுக பேட்டுக்கோழியைத் துரத்திக்கொண்டே ஓடியது. ●

# தோல்வியே காணுத ரஷ்ய படங்கள்!

## அந்த ரகசியம் என்ன?

**ஜப்பானில் சினிமாத் தொழில் அடைந்துள்ள வளர்சி பற்றி சென்ற வாரம் இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். இன்றையத் தொழில்கள் பலவற்றிலும் அதி முக்கிய ஸ்தானம் வகிக்கும் சினிமாத் தொழில் ரஷ்சியாவில் எவ்வளவு தூரம் வளர்ச்கியடைந்திருக்கிறது என்பதை ஆராய்கிறது இக்கட்டுரை.**

பணம்படைத்தவர்கள் மட்டும்தான் துணிந்து இறங்கக்கூடிய சினிமா உற்பத்தித் தொழில் ரஷ்யாவில் அரசாங்கத்தின் உடமையாகவிருக்கிறது. ஆனுல் இங்கு, தயாரிக்கப்படும் படங்கள் பெரும்பாலும் சோடைபோவதில்லே.

ஏன்?

இங்கு சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள அத்தனே பேரும் அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்கள் மட்டுமல்ல. சினிமாத் தொழிலில் பயிற்சிபெற்ற பட்டதாரிகள். இதுவே அவர்கள் வெற்றியின் ரகசியம்.

சோவியத் யூனியனிலுள்ள எந்த ஸ்ரூடியோவுக்குள் சென்ருலும் அங்கு நீங்கள் சந்திக்கும் நடிகர்கள், டைரக்டர்கள், திரைப்பட வசன கர்த்தாக்கள்; புகைப்படக் கலேஞர்கள், 'மேக்கப்' செய்பவர்கள் எல்லோருமே ஒரு சிறிய நீலநிற ஊசி குத்தியிருப்பதைக் காணலாம். அந்த ஊசியில் வி, ஜி, ஐ. கே என்ற எழுத்துகள் பொறித்திருக்கும், அதன் அர்த்தம் அவர்கள் அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் என்பதாகும்.

சோவியத் யூனியனில் சினிமாத்துறை பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்து இன்று சுமார் 42 வருடங்களாகின்றன. அதாவாவது சினிமாத்தொழிலே அரசாங்கம் மேற்கொண்ட சில மாதங்களில் மேற்படி பயிற்சி நிலேயமும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது 1919ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட சினிமா பயிற்சிக் கூடத்தில் இன்று பல்வேறுபாடுகளிலிருந்தும் மாணவர்கள் சென்று பயிற்சி பெறுகின்றனர்,

ஆரம்பத்தில் இது மொஸ்கோ அரசினர் சினிமாப்பாடசாலே என்றழைக்கப்பட்டது இப்பாடசாலேயில் நான்கு அறைகள் மட்டுமே இருந்தன, ஓரே ஒரு இலாக்கா மட்டுமே இயங்கியது, இதை 'நடிப்பு இலாக்கா" என்று அழைத்தனர், இதில் இருபத்தைந்து மாணவர்களே பயின்றனர்.

இந்த சினிமாப் பாடசாலேயே உலகில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சினிமாத்தொழில் விருத்தியடையும்போது சிறந்த கலேஞர்களும் தொழில் நிபுணர்களும் தேவைப்பட்டனர், அதன் விளேவாக சொவியத் சினிமாத்துறைப் பாடசாலே கல்லூரியின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதோடு கட்டிடமும் விசாலிக்கப்பட்டது

இந்தச் சினிமாக் கல்லூரிக்குள்ளே அழகான ஸ்ரூடியோ ஒன்றிருக்கிறது. அத்தோடு சினிமாவில் எத்துறையில் பயிற்சிபெற விரும்பினுலும் அத்துறையில் மிகத்திறமையாகப் பயிற்சிபெறக்கூடிய வகையில் சகல வசதிகளும் அமைந்திருக்கின்றன.

டைரக்ஷன், நடிப்பு, காட்சி புகைப்படப் பிடிப்பு. செட் அமைப்பு. ஆகியவற்றுக்குத் தனித்தனியே இலாக்காக்கள் அமைத்துள்ள இந்தக்கல்லூரியில் இப்பொழுது எழுநூறுக்கும் அதிகமானவர்கள் பயிற்சிபெறுகிருர்கள், இவர்களில் அநேகர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களே,

டைரக்ஷன் இலாக்காவில் நான்கு பிரிவுகள் இருக்கின்றன, நடிப்புப் படங்கள் செய்திப்படங்கள், விஞ்ஞானத்துறைப் படங்கள், டெலிவிஷன் ஆகிய நான்கு துறைகளிலும் இங்கு பயிற்சியளிக்கப்படுகின்றது,

நடிப்புப் படங்களுக்குரிய டைரக்ஷன் இலாக்காவில் பயிற்சிபெறும் பதினெட்டு மாணவர்களில் ஐந்துபேர் மட்டுமே ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்களெல்லாம் வெளிநாட்டவரே.

ஒருவர் டைரக்டராக வருமுன் ஐந்தரை வருடகாலம் பயிற்சி பெறவேண்டும், அதன்பின் ஆறுமாத காலம் ஒரு ஸ்ரூடியோவில் ஒரு டைரக்டரின் கீழ் உதவியாளராக கடமையாற்றவேண்டும் பயிற்சிபெறும் காலத்தில் ஒரு டைரக்டர் மாணவன் அங்குள்ள ஸ்ரூடியோவில் மூன்று படங்களே தரமானவையாகத் தயாரிக்கவேண்டும். இவர்கள் தயாரிக்கும் படங்கள் பொதுத் தியேட்டர்களில் காட்டப்படுகின்றன.

சாதாரண 'எக்ஸ்ரா' நடிகர்களிலிருந்து டைரக்டர்கள் ஈருக ஆறுவருடம்பயிற்சி பெற்ற சினிமாத் தொழிலில் புகுவதென்ருல் படங்கள் வெற்றியளிப்பதற்கு வேறு காரணமும் வேண்டுமா'

---

ஒரு பந்தளவு

# உதட்டுச் சாயம் விழுங்கிய 'சரோ'

"உதட்டுச் சாயத்தில் (லிப்ஸ்ரிக்) ஒரு ரென்னிஸ் பந்தளவு நான் விழுங்கிவிட்டேன்" என்ருர் பி. சரோஜா தேவி. அவர் 'தமாஷ்" பண்ணுவதாக எண்ணிக்கொண்டு எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆனுல் அவர் கூறியது 'தமாஷ்' அல்ல; உண்மைதான் என்ற விஷயம் பின்னுல்தான் தெரியவந்தது

படப்பிடிப்புக்காக 'மேக்கப்' செம்யும்போது சரேஜா தேவியின் உதட்டுக்குச்சாயம் பூசுவார்கள். உதட்டை ஈரமாக்குவதற்காக நாக்கினுல் அடிக்கடி அதைத் தடவிவிட்டுக்கொள்ளவேண்டும். இந்த வகையில் சினிமா உலகுக்கு வந்து—இற்றை வரையில் — ஒரு பந்தளவு உருண்டையை அவர் விழுங்கிவிட்டதாக கூறுகிருர்.

"அப்படியானுல் படுக்கைக்குப் போகும்போதுகூட உதட்டுக்கு சாயம் பூசுபவர்களுக்கு நீங்கள் ஏதாவது யோசனே கூற விரும்புகிறீர்களா"?

சரோஜாதேவி விழித்துக்கொண்டு மௌனமாக நின்ருர், இது உண்மையில் ஒரு சிக்கலான கேள்விதான். அதோடு ஒரு சினிமா நடிகையிடம் கேட்கக்கூடிய கேள்வியுமல்லத்தான் இது,

சங்கடமான நிலேயில் நின்ற சரோஜாவைக்காப்பாற்றமுன் வந்தார் ஒரு நட்சத்திரநடிகர். அவரது கருத்துத்தான் இது.

"கவர்ச்சியான அழகுக்குத்தான் உதட்டுச்சாயம் என்ருல் அதைப் பூசிக்கொள்வதில் தவருென்றும் இல்லே, ஆனுல் ஆண்கள் அதனுல் தொல்லேப்படுகிருர்கள். கன்னத்திலும் உடைகளிலும் வர்ணம் பூசிக்கொண்டு அவர்கள் தவிப்பதைப் பார்க்க ரம்மியமாகவிருக்கும்.



ஹோட்டல்களுக்கு தேநீர் சாப்பிடப்போனுல் எமக்கு முன் யார் வந்து 'டீ' சாப்பிட்டது என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கோப்பையில் ஓட்டிக் கொண்டிருக்கும் உதட்டுச்சாயம்.

வெறும் கடித்த துண்டைப் பார்த்துவிட்டு எகிறிக்குதிப்பான் ஒரு வாலிபன் ஆனந்த மிகுதியால். ஆமாம் அவன் காதலி வெளிநாட்டிலிருந்து அனுப்பிய 'பறக்கும் முத்தம்' (Flyingkiss) கடிதத் துண்டில் உதட்டுச் சாயத்தால் பதிக்கப்பட்டிருப்பதே அவன் மகிழ்ச்சிக்குக் காரணம்.

சிகரெட் 'ரே'யைச் சுத்தம் செய்யும் குடும்பப் பெண்கள் சிகரெட் துண்டில் சில வேளேகளில் உதட்டுச் சாயம் பட்டிருப்பதைக் கண்டு கணவன் மாருடன் மல்யுத்தம் செய்வதுமூண்டு.

உதட்டுக்குப் பெண்கள் சாயம் பூசும் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. உதட்டைச் சிவக்க வைக்கவேண்டும் என்ற அடிப்படை நோக்கோடுதான் வெற்றிலே போடும் பழக்கம் நாம் நாட்டில் ஏற்பட்டது.

நாளுக்குநாள் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும் போது 'லிப்ஸ்டிக்'கை மட்டும் ஏன்கைவிடவேண்டும். அதை ரசிக்கக்காம் பழகிக் கொள்வோம்."

---

# கதாசிரியர் கருணுநிதியின்

## மாத வருமானம் ரூபா 40,000!

திரைப்பட வசனகர்த்தாவும், தி. மூ. கழகத் தலேவருமான திரு. மு. கருணுநிதியின் மாத வருமானம் ரூ 40,000 மாம்!

இத்தகவலே அறிஞர் அண்ணு ஒரு பொதுக் கூட்டத்தில் வெளியிட்டார்.

சமீபத்தில் சென்னே சட்டசபைத் தேர்தலில் திரு. மு. கருணுநிதி தஞ்சைத் தொகுதியில் போட்டியிட்டுப் பாராட்டத்தக்க விதமாக வெற்றியீட்டியது யாவரும் அறிந்ததே.

# குமாரி சச்சுவின் பிறந்த நாள் விழா

திரைப்பட நடிகை குமாரி சச்சு (சரஸ்வதி)யின் பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

திரையுலகப் பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும், கலேஞர்களும் விழாவுக்கு வந்து சிறப்புத் தந்தனர்.

அனேவரையும் குமாரி சச்சுவும், மாடிலட்சுமியும் வரவேற்று விருந்துபசாரம் செய்தனர்.

குமாரி சச்சுவுக்கு இது எத்தனேயாவது பிறந்த தினம் என்றுதானே கேட்கிறீர்கள்? கப் சிப்!... ...அது சினிமா நடிகையின் இரகசியம்!

# விறகு வெட்டியாய் பிறந்து அடிமை முறை ஒழித்த ஆபிரகாம் லிங்கன்!

"தாயே, எனக்கு ஒரு கால்சட்டை தைத்துத் தருகிறீர்களா?" ஒரு பெண்மணியிடம் கேட்டான் ஒரு ஏழை வாலிபன். உடல் ஒட்டி உலர்ந்து போயிருந்தாலும் அங்கங்கள் உருக்கினால் வார்த்தது போலிருந்தது.

"நீ கூலி தருவாயா?" என்றாள் பெண்மணி.

"நிச்சயமாக. நீங்கள் என்ன வேலை வேண்டுமானாலும் தாருங்கள் செய்து முடிக்கிறேன்" இதுவாலிபனின் உறுதியும் தன்னம்பிக்கையும் நிறைந்த வார்த்தை.

அம்மையார் கொண்டு வந்து போட்டார் அடுக்கடுக்காக விறகுக் கட்டைகளை. அந்த ஆயிரத்து நானூறு விறகுக் கட்டைகளையும் பிளந்து கொடுத்தான் அந்த வாலிபன்.

ஆமாம்! அவன் விறகுவெட்டிதான். காடுகளில் சென்று விறகு வெட்டுவது, கமத்தொழிலில் தன் தந்தைக்கு உதவி செய்வது, மைல் கணக்காக நடந்து சென்று காய்கறி விற்பது இவைதான் அவன்தொழில். அவன்பள்ளியில் சென்று படித்ததெல்லாம் ஓரேயொரு வருடந்தான்.

இவன் யார் தெரியுமா?

இவன்தான் ஊக்கமும் விடாமுயற்சியுங் கொண்ட மேதை—நியாயம் இருக்கும் பக்கம் மட்டுமே வாதாடும் பிரபல வழக்கறிஞர்—நாலு கோடி அடிமைகள் தங்கள் அடிமைத் தளை அறுத்த அண்ணல் என்று கொண்டாடும் தெய்வம் — அமெரிக்க ஐக்கியநாடுகளை உருவாக்கிய சிற்பி—இன்று சர்வலோகப் பிரஜையாக விளங்கும் ஆபிரகாம் லிங்கன்.

அமெரிக்காவிலுள்ள கென்றக்கி என்னுமிடத்தில், காட்டுப் புறத்தில் ஒரு மரக்குடிசையில் 1809-ம் வருடம் பெப்பிரவரி மாதம் 12-ந்திகதி தோன்றினார் லிங்கன்.

இவர் பிறந்த இந்தச் சிறு குடிசையைப் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க அரசாங்கம் அதைச் சுற்றி ஒரு கற்கோட்டையைச் சமீபத்தில் எழுப்பியுள்ளது.

லிங்கன் தானாகவே படிக்க எழுதக் கற்றுக் கொண்டார். அடுப்பு வெளிச்சத்தில் இருந்துதான் இவர் கற்பது வழக்கம். எழுதுவதற்குக் காகிதமும், பென்சிலும் இல்லாமையால் மண்வெட்டியின் மீது கரிக்கட்டியினால் எழுதிப் படித்தார். சட்டக் கல்வியில் நாட்டங் கொண்ட இவர் பன்னிரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்த தன் நண்பர் ஒருவரிடம் நடந்து சென்று சட்டப் புத்தகங்களை வாங்கிப் படித்தார்.

மளிகைக் கடை ஒன்றில் இவர் வேலைபார்த்தபோது சாமான் வாங்கிய ஒருவருக்கு மீதிக் காசு ஆறுசதத்தைக் கொடுக்க மறந்து விட்டார். சுமார் இரண்டு மைல் தூரம் நடந்து சென்று—ஆறு சதத்துக்குரியவரைத் தேடிக் கண்டு பிடித்து—அவரிடம் அந்தப்பணத்தை ஒப்படைத்து வீட்டு திரும்பினார். இத்தகைய செயல்களால் இவருக்கு 'யோக்கியர் ஆபே' என்ற செல்லப் பெயர் மக்களால் சூட்டப்பட்டது.

1832-ல் இல்லியனாய் ராஜ்ய சட்ட சபைத் தேர்தலில் தோல்வியடைந்த லிங்கன் 1834-ல் மறுபடியும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின் மூன்றுமுறை தொடர்ந்து வெற்றியீட்டினார். இவர் முதன் முதலில் சட்டசபைக்குச் சென்ற போது பணம் கடன் வாங்கிப் புதுச் சட்டை தைத்தார்.

சட்டசபைத் தேர்தலில் லிங்கனோடு போட்டியிட்ட ஸ்டீபன் டக்ளாஸ் என்பவர் லிங்கன் காதலித்த அதேபெண்ணையே தானும் காதலித்தார். ஆனால் காதற் போட்டியிலும் லிங்கனே வெற்றி பெற்றார்.

1842-ல் மேரி டாட் என்ற பெண்ணை மணந்து கொண்ட லிங்கனுக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவற்றில் ஒருவன்தான் (முன்பக்கப் படத்தில் உள்ளவன்) பிற்காலத்தில் அமெரிக்க தூதராக இங்கிலாந்து சென்றரொபேட் டி. லிங்கன்.

நியூ ஆர்லியன்ஸ் என்ற இடத்துக்கு ஒருமுறை லிங்கன் படகில் சென்றபோது நீக்ரோக்கள் சிலர் கைவிலங்குகள் மாட்டப்பட்டு விலைகூறப் படுவதைக் கண்டார். அவர் உள்ளம் நைந்தது. எனக்குமட்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த அடிமை முறையையொழித்துக் கட்டிவிடுவேன், என்று அங்கேயே சங்கல்பம் செய்து கொண்டார்.

1860-ல் ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க அடிமை முறையற்ற வடபாகத்துக்கும், அடிமைமுறை கொண்ட தென்பாகத்துக்கும் பகைமை முற்றியது. 1860-ம் வருடம் நவம்பர் 6-ம் திகதி லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஆனால்!

தென்பாகத்து ஆறு ராஜ்யங்கள் ஐக்கிய அமெரிக்காவினின்று பிரிந்து தனிக் கூட்டுச் சேர்ந்தன. மறுவருடமே வடக்குக்கும் கிழக்குக்கும் உள் நாட்டுப்போர் மூண்டுவிட்டது. போருக்குத் தயாராயிராத வடபாகம் தோல்விக்கு மேல் தோல்விகண்டது. ஆனால் லிங்கன் சளைக்கவில்லை லட்சியத்துக்காக விடாமுயற்சியோடு போரிட்டார். இச்சமயத்தில் லிங்கனின் ஆசை மகன் உயிர் துறந்தான். அவர் உள்ளம் துயரப் பட்டது. ஆனால் லட்சியத்துக்காக உயிர் துறங்கும் படைவீரர்களின் பெற்றோரோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் காயம்பட்டவர்களின் மூகாமுக்குப் போகத் தவறுவதில்லை,

'இச்சண்டையில் வடபாகம் வெற்றி பெற்றால் அடிமை முறையை ஒழிக்க ஆண்டவனின் சம்மதம் கிடைத்து விட்டது என்றே நான் கொள்வேன்' என்று தமது மந்திரிகளிடம் கூறினார் லிங்கன். செப்டெம்பர் 17-ல்வடபாகத்துச் சேனை பெரும் வெற்றி ஈட்டியது.

அடுத்த ஐந்துநாட்களில் லிங்கன் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார்.

"வரலாறு என்பெயர் சொல்லுமாயின் அது இந்த ஒரு செயலுக்காகவே இருக்கும்" என்று விடுதலைச் சட்ட இறுதியில் பத்திரத்தில் கைச்சாத்திடும்போது லிங்கன் கூறினார்.

அடிமைகள் விடுதலை அடைந்துவிட்டனர். எங்கும் களிப்புக்கரை புரண்டோடியது. நாடு அலங்கரிக்கப் பட்டிருந்தது. லிங்கனும் தம் குடும்பத்தோடு நாடகம் பார்க்கச் சென்றார். மணி பத்துஅடித்து இருபது நிமிஷங்கள் சென்றிருக்கும் எல்லோரும் நாடகக் காட்சியில் ஒன்றியிருக்கும் வேளையில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது, லிங்கன் இருக்கையிலிருந்து குப்புற வீழ்ந்தார். கூடவே எல்லோர் இதயங்களும் வீழ்ந்தன. தனக்கென வாழாப் பெருந்தகையாளன் மறைந்தான், தன்நினைவை எல்லோர் உள்ளத்திலும் பொறித்து வைத்து விட்டு,

# 123 முறை கல்யாணம் செய்து உலக சாதனையை நிலைநாட்டியவன்!

கல்யாணம் செய்த மறுநாளே தம்பதிகள் விவாகரத்துச் செய்துகொள்வது மேல்நாடுகளில் ஒன்றும் விநோதமான காரியமல்லவாயினும் ஒருவன் உலக சாதனையை நிலைநாட்டியதும் அது செய்தியாகிவிடுகிறது. அத்தகையதுதான் பீட்டர் விளாடிசாவ்லிவ் நிக்கோலிக் விஷயமும்.

யூகோசிலேவியாவைச் சேர்ந்த நோவிசாட் என்ற இடத்தில் வசிக்கும் பீட்டருக்கு இப்பொழுது ஐம்பத்தேழு வயதாகிறது. பஞ்சு போன்ற தலை மயிரை உடைய பீட்டரைப் பார்ப்பவர்கள் எழுபத்தைந்து வயது மதிப்பார்கள்.

இந்த வயதிலும்கூட தன் காதல் அனுபவங்களை இவர் ரசனையோடும் உணர்ச்சியோடும் செல்லுகிறார்.

"தன்னைக் கணவன் நன்கு விரும்பவேண்டும் என்றே ஒருபெண் விரும்புகிறாள்" என்று தன் அனுபவத்தைக் கூறும் பீட்டர். இந்த முறையை வாலிபர்கள் பின்பற்றினால் பெண்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிடலாம், என்று வாலிபர்களுக்கும் ஆலோசனை கூறுகிறார்.

எவ்வளவுதான் 'மாப்பிள்ளைக் கந்த'ராக இருந்தாலும் டொன்ஜூவானோடு ஒப்பிடுகையில் இவர் ஒரு சாதாரண மனிதரே. ஸ்பெயினில் மட்டும் ஆயிரத்துமூன்று பெண்களை மணந்துகொண்டவன் டொன்ஜூவான். இவர்களுக்குள் உள்ள வேறுபாடு என்னவென்றால் டொன்ஜூவான் ஒரு பிரபு. பீட்டர் ஒரு நாடோடி (Gipsy)க் குடும்பத்தில் பிறந்தவர். அத்தோடு பீட்டரின் மனைவிகள் உலகின் பலபாகங்களையும் சேர்ந்தவர்கள்.

யூகோசிலேவியப் பெண்களோடு செக்கோ சிலேவியா, ஹங்கேரி, ரஷ்யா, பல்கேரியா, ஜெர்மனி ஆகிய இடங்களிலெல்லாம் இவர் பெண் எடுத்தார்.

ஜெர்மன்பெண்ணோடுஇவர் வாழ்ந்ததெல்லாம்ஆகமூன்றே மூன்று நாட்கள் மட்டும்தான் ஏன்? என்று கேட்டால் "எங்களுக்குள் ஒத்துவரவில்லை" என்றுமட்டுமே பீட்டர்கூறுகிறார். இவரது ஆகக்குறுகிய கால மணவாழ்க்கை மூன்று மணித்தியாலங்கள் கொண்டது. அது முறிந்ததற்கும் ஒத்துவராமையே காரணமாம்.

இவரோடு ஆகக்கூடிய காலம்—அதாவது இரண்டு வருடங்கள்-வாழ்ந்த பெண் ரஷ்யாவைச் சேர்ந்தவள். அவளை இவர் தமது 15வது வயதில் மணந்துகொண்டார்

123 முறை கல்யாணம் செய்தும் இவருக்குள்ளது ஆக 22 பிள்ளைகள்தான். இவர்களில் மூத்தவனுக்கு இப்போது 40 வயதாகிறது. அப்பனை முன்னோடியாகக் கொண்டோ என்னவோ இவன் பிரம்மச்சாரியாகவே இன்னும் இருக்கிறான்.

"என்னுடைய பிள்ளைகள் எங்கெந்தப் பெண்களுக்குப் பிறந்தவர்கள் என்பது எனக்கு நினைவில்லை. அதோடு எனக்குப் பலரைத்தெரியாது, தெரியவேண்டியது அவசியமுமில்லை. அவர்களுக்கு நான்தான் தந்தையென்றுமட்டும் தெரிந்தால் போதும்." என்று கூறுகிறார் பீட்டர்.

'மாஷல் டிட்டோ தனது 'மக்கள் ஜனநாயகத்துக்கு முரணாக நடந்துகொள்கிறாய் என்று உன்மீது என்றோ ஒருநாள் முட்டிக்கொள்ளப் போகிறார்'' என்று நண்பர்கள் பீட்டரை எச்சரித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பீட்டர் அளித்த ஒரே பதில்:

"என் விஷயத்தில் தலையிட மாஷல் டிட்டோ யார்? அவர் மூன்றுமுறை கல்யாணம் செய்திருக்கிறார். நான் அவரை விடச் சிறந்த முற்போக்குவாதியும் புரட்சியாளனும்."

கடந்த ஆறுமாதங்களுக்கு முன் கடைசித்திருமணம் செய்துகொண்ட பீட்டர் அதைப்பற்றிக் குறிப்பிடுகையில் "இற்றை வரையில் குடும்பம் சுமுகமாகச் சென்று கொண்டிருக்கிறது. எனக்குப் பிடித்தமான வகையில் அவள் நடந்துகொள்கிறாள். இனி எப்படியெப்படியோ?"

அவர் கூறும் தோரணையைப் பார்த்தால் இன்னும் குறைந்தது இருபத்தைந்தாவது போடுவார் போலத் தெரிகிறது.

## நீர்மூழ்கியின் சாதனை

பனிக்கட்டிக்கு அடியில் 31 நாட்கள் பிரயாணம் செய்து ஒரு உலக சாதனையை நிலைநாட்டியுள்ளது அமெரிக்க யு, எஸ். எஸ். சார்க்கோ என்ற நீர் மூழ்கிக் கப்பல்.

இதுவரை எந்தக் கப்பலும் இவ்வளவு அதிக நாட்கள் பனிக்கட்டிக்குக் கீழ் பிரயாணம் செய்ததில்லை

## நாயின் பதில் உதவி

கண் தெரியாதவர்களை வழி நடத்திச் செல்வதற்கு நாய்களைப் பழக்கும் ஸ்தாபனம் ஒன்று லொஸ் ஏஞ்சல் என்னும் இடத்தில் இருக்கிறது. இங்குள்ள நாய்கள் மிகவும் சாமர்த்தியமானவை.

இங்கு ஹாங்க் மொலிவிக் என்ற ஒரு குருடர் இருந்தார். கடந்த 12 வருடங்களாக இவரை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை கிப் என்ற நாய் ஏற்றுக் கொண்டது. சத்திர சிகிச்சையின் மூலம் ஹாங்கின் ஒரு கண்ணுக்குப் பார்வை அளிக்க முடியும் என்று கருதிய டாக்டர்கள் தமது முயற்சியில் வெற்றிகண்டனர்.

பார்வை பெற்றதால் மகிழ்ச்சியடைந்த காங்கின் முகம் வாடிவிட்டது. பன்னிரண்டு வருடங்கள் இணைபிரியாத தோழனயிருந்த 'கிப்' அவரை விட்டுப் பிரிந்து விட்டதே அதற்குக் காரணம்,

'கிப்' மேற்படி ஸ்தாபனத்துக்குச் சொந்தமானது. அது தன் கடமையை இன்னொரு குருடருக்குச் செய்யப் போய் விட்டது.

ஒருநாள் அந்த ஸ்தாபனத்திலிருந்து ஹாங்கிற்கு திடுக்கிடும் தகவல் கிடைத்தது. 'கிப்' பார்வை இழந்து வருவதாகவும் அதன்சேவை ஸ்தாபனத்துக்கு இனித் தேவைப்படாதாகையால் சுட்டுக்கொல்லப் படலாம் என்றும் அத்தகவல் தெரிவித்தது.

ஹாங்க் துடிதுடித்தார். மேற்படி ஸ்தாபனத்துக்கு விரைந்து சென்று 'கிப்'பைத் தம்மிடம் தரும்படி கேட்டுக்கொண்டார். குருட்டு நாயைக் கொண்டுபோய் இந்தமனிதர் என்ன செய்யப் போகிறார் என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்,

கிப்பினால் வழி நடத்தப்பட்ட ஹாங்க் இப்பொழுது கிப்பை வழிநடத்திச் செல்வதை அங்குள்ள வீதிகளில் இன்றும் காணலாம்.

# சுவையான செய்திகள்

## செங்குத்தாக மலை ஏறும் அதிசயக் கார்

செங்குத்தான மலைகளிலே ஏறிச் செல்லக் கூடியவிதமாகவும், பள்ளம், திட்டிகளிலும், சதுப்பு நிலங்களிலும் இலகுவாகச் செல்லக்கூடிய முறையிலும் ஒரு புதுக்கார் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது, 'ஜிகர்' என்றழைக்கப் படும் இக்கார் செங்குத்தான மலைகளில் 45 பாகை சரிதுசெல்லக்கூடியது.

இதற்கு ஆறு சக்கரங்கள் உண்டு. அவற்றில் குறைந்த அமுக்கமுள்ள காற்று நிரப்பட்டுள்ளது. அதிசய சக்தியின் சூட்சுமம் சக்கரங்களிலேயே அடங்கியுள்ளது. இடதுபக்கத்து மூன்று சக்கரங்களையும் இயக்க ஒரு என்ஜினும், வலப் பக்கச் சக்கரங்களை இயக்க ஒரு எஞ்ஜினுமாக இரண்டு எஞ்சின்கள் இக்காரில் பொத்தப் பட்டிருக்கின்றன.

## விண்கல்வீழ்ச்சிக்கு 1500 மான்கள் பலி

எரிகற்கள் என்பவை பூமியைப்போலவே சூரியனை மையமாகக் கொண்டு சுற்றிவருகின்றன. இந்த எரிகற்கள் பூமியை நெருங்கும் போது பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு, காற்றுமண்டலத்தில் மிக வேகமாகப் பிரயாணம் செய்கின்றன இவை பிரயாணம் செய்யும் வேகம் ஒரு துப்பாக்கிக் குண்டின் வேகத்தைக் காட்டிலும் நூற்றுக் கணக்கான மடங்குகள் அதிகமாகவிருக்கும்.

இக்கற்கள் நேராகப் பூமிக்கு வருமானல் நாம் உயிர்வாழ்வதே துர்லபம் இந்த ஆபத்திலிருந்து எம்மைக் காப்பது பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலம். இக்கற்களுக்கும் காற்றிலுள்ள அணுக்களுக்கும் உராய்தல் ஏற்படுவதால் அவை இடையிலேயே எரிந்துபோகின்றன, வெகு சிலகற்கள் பூமிக்கே வந்துவிடுவதுமுண்டு. எரிகற்கள் வானவெளியில் எரியும்போது ஏற்படும் ஒளியைத்தான் நாம் எரி நட்சத்திரம் என்கிறோம்.

1908-ம் வருடம் சைபீரியாவின் வடபகுதியில் ஒரு பெரி விண்கல் விழுந்தது, இக்கல் விழும்போது மிகப்பெரிய திச்சுவாலை எழுந்தது.

இடியைக் காட்டிலும் பன்மடங்கதிகமான சத்தம் சுமார் அறுபது மைல் சுற்று வட்டாரத்தில் கேட்டது, ஒரு பயங்கரக் காற்று அலை எழுந்து எதிர்ப்பட்டவைகளைச் சின்னபின்னப்படுத்தியது, விண்கல் வீழ்ந்த இடத்தில் சுமார் 1500 மான்கள் நிறைந்த கூட்டமொன்று எரிந்து சாம்பராகியதற் கடையாளமாக அவற்றின் கருகிய உடல்கள் காணப்பட்டன,

## உலகின் விலை மதிப்பற்ற நூல்

உலகத்திலே மிகவும் விலை மதிப்புள்ள நூல் ஒன்று இருக்கிறது. அது என்ன தெரியுமா? இஸ்லாமிய வேதத்தைப் போதிக்கும் புனித நூலான திரு குர்—ஆன் தான் அது!

பாரசீக மன்னர் ஒருவர் ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு பணம் படைத்த சீமானுக்கு அந்தப் புத்தகத்தை அன்பளிப்பாகக் கொடுத்தாராம். அந்தப் புத்தகம் இப்பொழுது கல்கத்தாவிலுள்ள இந்திய தேசிய நூல் நிலையத்தில் இருக்கிறது!

அதன் விலைமதிப்பு என்ன தெரியுமா? மூவாயிரம் பவுன்கள். அதாவது கிட்டத்தட்ட நாலு லட்சம் ரூபா! அந்தப் புத்தகத்தின் காகிதங்கள் முழுவதும் தங்கத் தகடுகள்! பக்கத்துக்குப் பக்கம் விலைமதிப்பற்ற இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றில் அறுபத்தேழு உயர்ந்த ரக முத்துக்களும், 132 சிவப்பு இரத்தினக் கற்களும், 109 சிறந்த வைரங்களும் இருக்கின்றனவாம்!

## சேவை செய்யும் டெலிபோன்!

ஹங்கேரி நாட்டின் தலைநகரான புடாபெஸ்ட் என்னும் நகரிலுள்ள டெலிபோன்கள் பலவிதமான சேவைகளைச் செய்துவருகின்றன. 'உயிரற்ற ஜடப்பொருள் சேவை செய்வதாவது?', என்று ஆச்சரியமாக இருக்கிறதா?

சங்கீதக் கச்சேரி செய்யும் பாடகர்களுக்கு, 'நீங்கள் பாடவேண்டிய நேரம் வந்துவிட்டது!' என்று அறிவிக்கும்! குழந்தைகளை நித்திரையில் ஆழ்த்துவதற்காகப் பாட்டிகளைப் போல் சுவையான கதைகள் பலவற்றைச் சொல்லும்; குதிரைப் பந்தயத்தின் முடிவுகளைப்பற்றி யாராவது விசாரித்தால், கடைசிநேரமுவரை அதன் முடிவை சற்றேனும் சலிக்காமல் அறிவித்துக் கொண்டேயிருக்கும்; சமையல் செய்வதற்கான குறிப்புகளை விபரமாகச் சொல்லும்; அந்த வாரத்தில் பிரபலமான புதுப்பாடலை அறிவிக்கும்; இவையெல்லாம் காணுதென்று இப்பொழுது ஒரு புதியசேவையையும் செய்ய ஆரம்பித்திருக்கின்றன, புடாபெஸ்ட்டெலிபோன்கள். அது என்ன தெரியுமா? அயல் மொழிப்பாடங்களையும் கற்பிக்கின்றன இந்த டெலிபோன்கள்!

## சித்திரங்களின் சக்தி!

நியூயார்க் நகரில் சிறு குழந்தைகள் படிக்கும் 'கிண்டர் கார்ட்டன்' பள்ளிக்கூடம் விட்டதும், பள்ளிக்கூடத்தின் முன் சில பஸ்கள் வந்து நிற்கும். குழந்தைகள் எதில் ஏறுவதென்று தெரியாமல் தவிப்பார்கள். இதைப் பார்த்த பள்ளிக்கூட அதிகாரிகள், ஒரு பஸ்ஸின் மேல் முயல். ஒன்றில் கோழிக்குஞ்சு, மற்றொன்றில் கரடி இப்படிப் பல வர்ணச் சித்திரங்களைத் தீட்டிவிட்டார்கள், இப்பொழுது குழந்தைகள் தாங்கள் ஏற வேண்டிய பஸ் எதுவென்பதை அறிந்து, கஷ்டமின்றி பிரயாணம் செய்கிறார்கள்!

## டெலிபோன் மூலம் கல்வி!

ஒரு காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மணல் மீது அமர்ந்து நெடுங்கணக்குச் சொல்லிய காலம் போக நாகரிகத்தின் வளர்ச்சியால் குழந்தைகளுக்கென சகல வசதிகளுடன் பாடசாலைகளும், பட்டதாரிகள் கல்வி பயில்வதற்கெனக் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் தோன்றி அதன்மூலம் மாணவர்கள் தங்கள் அறிவைப் பெருக்கினர். காலப்போக்கில் கீழ்நாட்டு மாணவர்கள் மேல்நாட்டில் வசிக்கும் ஆசிரியர்களிடத்தில் தபால்மூலம் கல்வி கற்றுப் பல பரீட்சைகளில் பங்குபற்றி வருகின்றனர்,

தற்போது இந்தக் கல்வி விஷயத்தில் புது மாற்றம் ஒன்றைப் பிரபல அமெரிக்க பேராசிரியரான எட்வர்ட் ஜேம்ஸ் என்பவர் கையாண்டு வருகிறார். தம்மிடம் கல்வி கற்கவிரும்பும் மாணவர்களுக்கு டெலிபோன் மூலமாகக் கல்வியைப் போதித்து வருவதுதான் இந்தப் புதுமுறைத் திட்டம், ஒரு பத்திரிகை நிருபர் திரு, ஜேம்ஸைப் பேட்டி கண்டபோது, "இந்தத் திட்டத்தினால் மாணவர்கள் சிரமமின்றிப் பெரும் பயனை அடைகிறார்கள், இன்னும் சில காலத்தில் 'டெலிவிஷனின்' உதவி கொண்டு மாணவர்களுக்குக் கல்வியைப் போதிக்கலாம் என நான் நம்புகிறேன்" என்று திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டார்.

உங்கள் துணிகள்
வெண்மையாகவும்
பிரகாசமாகவும் விளங்க
யாழ் சோப்
உபயோகியுங்கள்.
யாழ் சோப்
தரத்தில் சிறந்தது. அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பல மடங்கு லாபம் கிடைக்கிறது.
'யாழ் சோப்' பாவனையாளர்களுக்கு சிறப்பு பரிசுகளும் கிடைக்கும். விபரங்களை எதிர்பாருங்கள்!

ROYAEL
PHONE: 397 JAFFNA
Royal Dispensary

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

8-4-62 முதல் 14-4-62 வரை

மேடம்: செலவினங்கள் இந்த வாரத்தில் மிக அதிகமாகும். ஆனல் வருவாயுங் குறையாது. மூத்த சகோதரரால் விசேஷ நன்மையும் உதவியும் உண்டு. தேகசுகம் மட்டும் தொடர்ந்து பாதிக்கப்படும்.

இடபம்: உங்கள் சொந்த விஷயங்களிலும், தொழில் விஷயங்களிலும் சில அபிவிருத்திகள் காணப்படுகின்றன. புதிய விஷயங்கள் தடைப்பட்டாலும் நிச்சயமாக அநுகூலமடையும். பிதாவழிபந்துக்களாற் கஷ்டமுண்டு.

மிதுனம்: குடும்பச்சூழ் நிலையில் சிறு அபிவிருத்திகள் காணப்படுகின்றன. தொழிலில் நல்ல முன்னேற்றமும் லாபமும் உண்டு. ஆனல் மனதில் அமைதி நிலவாது.

கடகம்: குடும்பச் சூழ்நிலை திருப்திகரமாக இருக்காது. உங்கள் தொழில் விஷயங்களிலும் முன்னேற்றம் காணப்படவில்லை. செலவினங்களும் அதிகமாகும்.

சிங்கம்: எதிர்ப்புகளைச் சமாளித்துத் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருள் விருத்தியுண்டு. ஆனற் தேகசுகம் பாதிக்கப்படும். கடுஞ்சுரம் பிணி கண்டு மாறும்.

கன்னி: குடும்பத்தில்மறுபடியும் சில கஷ்டங்கள் ஏற்படும். எல்லா விஷயங்களிலும் அவதானமாக நடக்கவும்.

துலாம்: மாதா வழிபந்துக்களால் கஷ்டமுண்டு. மாதாவுக்குச் சுகவீனமும் காணப்படுகின்றது. வாரத்தின் முதலிரண்டு நாட்களையும் அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்களில் தொழிலில் முன்னேற்றமும் சத்துரு ஜயமும் உண்டாகும்.

விருச்சிகம்: தேகசுகம் இவ்வாரத்தில் பாதிக்கப்படும். வயிற்றில் கோளாறுகள் காணப்படுகின்றன. குடும்பச் சச்சரவுகளும் மனக்கவலையும் உண்டு. திங்கள் பிற்பகல் செவ்வாய், புதன் வாரங்களை அவதானமாகக் கழிக்கவும். அன்னியரின் சகாயம் மட்டும் உண்டு.

தனுசு: வாரத்தின் முற்பகுதியில் தொழிலில் சிறு முன்னேற்றமுண்டு. ஆனல் பொறுப்புகளும் பிரயாசமும் அதிகமாக இருக்கும். வியாழன் வெள்ளி சனி வாரங்களை அவதானமாகக் கழிக்கவும்.

மகரம்: பொருள் விருத்தியுண்டு. இந்த வாரத்தில் தொழிலில் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றது. ஆனல் மனதில் அமைதி நிலவாது. இளைய சகோதரரால்நன்மையுண்டு. சனிக்கிழமை பிற்பகலை அவதானமாகக் கழிக்கவும்.

கும்பம்: இவ்வாரம் நேத்திர பீடை யுண்டு. நண்பர்களுடன் விரோதங்களும் தப்பபிப்பிராயங்களும் ஏற்படும். ஆனல் போட்டிகளைச் சமாளிக்க முடியும்.

மீனம்: உங்கள் சொந்த விஷயங்கள் சிக்கலாக இருக்கும். அதிகமாகக் கோபம் வரும். தேகசுகமும் பாதிக்கப்படும். ஆனல் பொருள் விருத்தியுண்டு.


**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தஊர் வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.



கவர்ச்சிகரமான

புளக்குகள்

செய்வதற்கு சிறந்த இடம்

SRI LANKA BLOCK MAKERS
131, MESSENGER STREET,
COLOMBO.


# என்னசேதி?

### கலையரசு சொர்ணலிங்கம் நடிக்கும் நாடகம்

இலங்கை வானெலி நிலையத்தினர் வருஷப் பிறப்பன்று அஞ்சல் செய்ய இருக்கும் நாடகவிழா நிகழ்ச்சிகள் 10-4-62 இரவு 6-45 மணியளவில் கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் ரசிகர்கள் முன் நடிக்கப்பட இருக்கின்றன. முக்கிய நிகழ்ச்சியாக எ. ரி. பொன்னுத்துரை எழுதிய ''வருஷம் பிறந்து முன்னம் முன்னம்'' என்ற நகைச்சுவை நாடகம் இடம் பெறும். இந்நாடகத்தில் கலையரசு கே. சொர்ணலிங்கம், உட்படபலர் பங்கு பற்றுகிறார்கள். இதைவிட மட்டக்களப்புத் தமிழிலும் இந்தியத் தமிழிலும் எழுதப்பட்ட இருநாடகங்கள் இடம் பெறும் எனத் தெரிகிறது.

● ●

### சம்பத்துக்குக் கடிதம்

திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து பிரிந்து, தமிழ் தேசிய கட்சியை உருவாக்கியிருக்கும் திரு. ஈ. வி. கே சம்பத்தை மீண்டும் தி. மு. க. வில் சேர்ந்து பணி புரியும்படி கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வித்துவான் வ. கந்தையா, சம்பத்துக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

● ●

### சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம்.

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய எட்டாவது வருடாந்தக் கூட்டம் ஆசிரியர் க. தம்பிராசாவின் தலைமையில் கடந்த 25-3-62 அன்று நடைபெற்றது. புத்தாண்டு உத்தியோகஸ்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

● ●

### சிப்பிப் பொருட் காட்சி.

கடற் சிப்பிகளைக் கொண்டு செல்வன், யோகநாதன் என்ற பதினேழு வயது மாணவன் தயாரித்த பொருட்காட்சி கடந்த மாதம் 30, 31-ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

# இத்தால்... சகலரும் அறிவது!

### ஆழி சூழ் ஈழத்திலே......

இலங்கையைச் சுற்றியிருப்பது கடல். கடலிலே இருப்பதுதான் தண்ணீரும், மீனும். அந்தத் தண்ணீரிலிருந்து உப்பும்; மீனிலிருந்து கருவாடும் தயாரிக்கப்படுகிறது என்று நான் பள்ளிக் கூடத்தில்படித்தகாலத்தில் எங்கள் வாத்தியார் அடிக்கடி சொல்லுவார்! ஆனல்......இந்த ஆழி சூழ் ஈழத்திலே உப்புக்கும், கருவாட்டுக்கும் இன்று பெரும்பஞ்சம் ஏற்பட்டு விட்டதே!

மன்னர். — வி. கணேசராசா.

### பொன்னுன புதினம்!

'புதினம்' மற்ற வழவழாப் பத்திரிகைகளைப் போல் இல்லாமல், விஷயங்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், சுவையாகவும் தருவதில் நிகரற்று விழங்குகிறது! அரசியல் ஊழல்களை உடனுக்குடன் அம்பலப்படுத்தும் பொன்னுனபுதினம் புகழ் பெற்று வாழட்டும்!

தெரணியகலை. — செ. இரத்தினசபாபதி.

### மாங்கல்யப் பிச்சை

புதினத்தில் வெளியான ''மாங்கல்யப் பிச்சை'' என்ற சி. பரமானந்தத்தின் படைப்பு அபாரம்! ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

கொழும்பு 15 — நவாலியூர் த. பரமலிங்கம்.

### மலர்தனைப் போல்.......

மலர்தனைப் போல் 'புதினம்' மலர்ந்து விட்டது! சுவையான செய்திகளின் சுவையைச் சொல்லால் விளக்க முடியாது கதைகள் அற்புதம். திரு தாஸ் எழுதும் ஈச்மன் கதை பிரமாதம்.

யாழ்ப்பாணம். — பி. வி. சிவா.

### தற்கொலை சீஸன்

இலங்கையில் அம்மை நோய் சீஸன் முடிந்ததும் இளம்பிள்ளை வாதம் ஆரம்பமானது. ஆனல் தற்கொலை சீஸன் மட்டும் அன்று முதல் இன்றுவரை அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவே இல்லையா?

குருநகர். — செல்வீ பி. கிறேஸ்.

### அடுத்த தொடர் விஷயம்?

புதினத்தில் ஜோ. ஏ. எம். தாஸ் எழுதிவந்த அடல்ப் ஈச்மன் கதை இத்தனை சீக்கரத்தில் முடிந்துவிடும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. அவர் அடுத்ததாக எழுதவிருக்கும் ஈச்மனுக்கு மூத்த சூர்ப்பனகையான எல்ஸியின் கதை எப்பொழுது ஆரம்பமாகப் போகிறது?

கொழும்பு. — எம். மோகன்.

### அவள்தான் பெண்!

கடந்தவாரம் புதினத்தில் வெளியான 'அவள்தான் பெண்' என்ற சிறுகதை பலே ஜோர் ஆசிரியர் எழுதியிருந்த பாணி அழகாக அமைந்திருந்தது.

கண்டி. — எம். எஸ் பாருக்.

### ஸ்ரீமான் சித்தம்பலம்!

'மாலா' வின் தயாரிப்பான ''சிரித்துப் பாருங்கள்'' என்ற பகுதியில் ஸ்ரீமான் சித்தம்பலம் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு விதமாகத் தோற்றமளித்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார். 'சிரிப்பு ரொனிக்கை எமக்குத் தரும் மாலா அக்காவுக்கு எனது வாழ்த்துக்கள் இதோ!

பதுளை. — செல்வி. யோகா.


✻ மின்னும் வைரங்களுக்கும் ✻ உயரிய நகைகளுக்கும்

தங்கப் பவுண்
நகை மாளிகை

போன்: 585


கே. என். மீருன் சாஹிப்

கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.

# சிரித்துப் பாருங்கள்

தயாரிப்பு: 'மாலா'

## இளம்பிள்ளை வாதத்தை கொண்டு வருவீர்?



குடைக்காரர்:- எப்படி, குழந்தை குட்டி யெல்லாம் சௌக்கியமா?

குடும்பிக்காரர்:- ஓ.. கடைக்குட்டிப்பயல் கூட 'ராஜு மாமா எப்ப வருவார்' என்றுகேட்டான்... ஆமாம், இப்ப பள்ளிக் கூடங்களுக்கு விடுமுறை காலமில்லையே......

குடை:- சிறுபிள்ளை வாதம் என்று கொழும்பில் பாடசாலைகளை மூடிவிட்டார்கள். அங்கே ஏன் சும்மா இருப்பான் என்று ஊருக்குக் கிளம்பி வந்து விட்டேன். பின்னேரம் உங்க வீட்டுப்பக்கம்......

குடுமி:- வரலாமென்று நினைச்சீங்க, மனசு வரலை. பின்னே எப்படி வரும்? கொழும்பிலை பாடசாலைகளை அடைச்சதாலைதானே யாழ்ப்பாணத்திலும் அந்தநோய் பரவிவிட்டதென்று எனக்கே தெரியுது. வாத்தியாயர், உங்களுக்கு அது தெரியாதா?

குடை:- ? ? ?

ஒருவர்:- என்ன சார், உங்கள் மகன் சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். பையன்படித்து முடித்ததும் என்ன செய்யப் போகிறான்?

மற்றவர்:- வேறு என்ன செய்யப் போகிறான்?... அவனுடன் படிக்கும் ஒரு பெண்ணுக்கு கணவனாகப் போகிறான்!



முனியன்:- (சிறையிலிருந்து திரும்பியவர்) அஞ்சு வருசத்துக்கு முன்னாலை திருட்டுக் குற்றத்துக்கு எனக்குத் தண்டனைவழங்கும் போது 'இனிமேல்மான மாய்ப்பிழை' என்றுபுத்திகூறினீங்க...

நீதிபதி:- ஆமாம்; அதுக்கென்ன இப்போது?

முனியன்:- ஒரு காவல் காரன் வேணுமென்று பேப்பரிலை போட்டிருந்தீங்க: அதுதான் உங்ககிட்டையே வேலை பாக்கலாமெண்டு வந்திருக்கிறேன்.

நீதிபதி:- ? ? ?

நோயாளி:- (நன்றியுடன்) எமனுடன் போராடிக் கொண்டிருந்த என் உயிரைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக் கிறேன் டாக்டர்.

டாக்டர்:- இதில் நான் ஒன்றும் செய்து விடவில்லையே? எல்லாம் ஆண்டவன் செயல்!

நோயாளி:- அப்படியானால் உங்கள் பில் பணத்தையும் அந்த ஆண்டவனுக்காக அனுப்பி விடுகிறேன்?

டாக்டர்:- ? ? ?

● ●


ஒருவன்:- உனக்கும் உன் மனைவிக்கு மிடையில் நேற்றிரவு நடந்த சண்டை கடைசியில் என்னவாய் முடிந்தது?

மற்றவன்:- ஓ, அதுவா? அவள் முழந்தாளில் மண்டியிட்டு தவழ்ந்து வந்தாள்......

ஒருவன்:- அடே; அப்படியா? அவள் என்ன சொன்னாள்?

மற்றவன்:- கட்டிலுக்கு வெளியே வா, என்று தொண்டைகிளியக் கத்தினாள், நான் அசைந்து கொடுக்க வில்லை.

## வெள்ளைக்காரனுக்கு விளங்காத இங்கிலீஷ்!



பின்கை கட்டியிருப்பவர்:- என்னோடு ஆங்கிலத்தில் பேசவே இப்படித் திண்டாடுகிறாய் ...உங்கள் கம்பனி வெள்ளைக் காரனோடு எப்படி சமாளிக்கிறாய்?

மற்றவர்:- நீங்களொண்டு... நான் இங்கிலீஷில்தான் வெளுத் வாங்குவதேன்...வெள்ளைக்காரன் தான் இங்கிலீஷ் தெரியாமல் விழிப்பான்.

நீதிபதி:- நீ, வீட்டு வாசல் கதவை உடைத்துக் கொண்டு போய் திருடியது உண்மைதானா?

திருடன்:- ஆம் ஐயா.

நீதிபதி:- ஏன் அப்படிச் செய்தாய்?

திருடன்:- வாசல் கதவின் மேல் 'நல்வரவாகுக!' என்று போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. அதனால் தான் .....

## ஸ்ரீமான் சித்தம்பலம் (4) இதற்குத்தானா?




ஒருவன்: என்னுடைய முகம் அழுக்காயிருக்கிறதா அல்லது அது என் கற்பனையாயிருக்குமோ?

மற்றவன்: உன்னுடையமுகம்சுத்தமாய்த்தான் இருக்கிறது. உன்னுடைய கற்பனையைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது.

# கிழவரும் இளமையோடு வாழலாம்!

## ஜெர்மன் டாக்டரின் புதிய கண்டுபிடிப்பு!

சேர் வின்ஸ்டன் சேர்சில் தனது 86 வது வயதிலும் திடகாத்திரமாக இருக்கிறாரென்றால் அவர் டாக்டர் நீஹான்ஸுக்குத் தான் நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஜெர்மன் சான்ஸ்லர் டாக்டர் அடினோருக்கும் இப்பொழுது 85 வயதாகிறது. ஆனால் அவருடைய சக அதிகாரிகள் வியக்கத்தக்க முறையில் இன்றும் அவர் செயலாற்றுகிறாரென்றால் அந்தப் பெருமையும் டாக்டர் நீ ஹான்ஸையே சாரும்.

அப்படி அதிசயமான சக்தி நீஹான்ஸிடம் என்ன இருக்கிறது?

வயோதிகர்கள் இளமையோடு செயலாற்றுவதற்கும், அவர்கள் மூளை விறுவிறுப்பாக இருப்பதற்கும், உடலில் உள்ள அணுக்களின் தன்மைதான் காரணம் என்பதை உணர்ந்த டாக்டர் நீஹான்ஸ் தனது ஆராய்ச்சியைத் தொடங்கினார்.

பெண்களின் வயது 39க்கு வந்ததும் அதற்கு மேல் நகராமல் நாலைந்து வருடங்கள் 'பிகு' பண்ணுவது எல்லோருக்கும் தெரிந்ததே. அதற்குக் காரணம் அவர்கள் தாம் இளமையாய் இருக்கவிரும்புவதோடு மற்றவர்களும் தம்மை இளமையானவர்கள் என்று நினைக்க வேண்டும் என்று ஆசைப்படுவதே. இதில் தவறொன்றும் இல்லை. யாரும் இளமையாக இருக்க விரும்புவது இயற்கை. இளமையோடிருப்பது சாத்தியப்படக்கூடியதே என்று நிரூபித்தவர் டாக்டர் நீஹான்ஸ்.

மனித உடலில் கோடிக்கணக்கான உயிர் அணுக்கள் இருக்கின்றன. மனிதன் முதுமையை அணுகும் போது உடலிலுள்ள உயிர் அணுக்கள் சிறிது சிறிதாகச் சக்தியை இழக்கின்றன. அதுவே பிற்காலத்தில் மனிதனின்மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யாததற்கும், அவன் கஷ்டப்பட்டு வேலை செய்ய முடியாமைக்கும் காரணமாகும்.

வயது முதிர்ந்தவர்களாயினும் அவர்களது உடலிலுள்ள ஜீவ அணுக்கள் சக்தி உள்ளனவாயிருந்தால் அவர்களால் நீண்டகாலம் சீவிக்க முடிவதோடு சுறுசுறுப்பாகவும் கடமையாற்ற முடியும் என்பதை உணர்ந்த டாக்டர் நீஹாம், பசுக்கன்று, ஆட்டுக்குட்டி போன்ற இளம் மிருகங்களின் உடலிலுள்ள அணுக்களை ஊசிமூலம் மனிதர்களின் உடலில் செலுத்தி அதில் வெற்றியுங் கண்டார்.

இந்த முறையை இவர் தம் செயலாகத்தான் கண்டுபிடித்தார்.

பெனிஸிலினைக் கண்டு பிடித்த காலம் சென்ற டாக்டர் அலெக்சான்டர் பிளெமிங் என்பவரது ஸ்தானத்தை இப்பொழுது இவர் வகித்து வருகிறார்.

Registered as a newspaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்....

வரதர் வெளியீடு

### ரஷ்யாதான் சிறந்ததா?

இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்துகளில் ரஷ்யாவிலிருந்துவந்தமருந்தே சிறந்ததென்று பொது மக்களிடையே ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்ட காரணமாக ரஷ்யா மருந்து ஆஸ்பத்திரிகளில் கோரப்பட்டது. இது தவருன எண்ணமென்றும் ரஷ்யா, பிரிட்டன், ஆகிய நாடுகளிலிருந்து வந்த மருந்துகள் யாவும் ஒரே தன்மையானதுதானென்றும் சுகாதாரப் பகுதிஒரு அறிக்கை விட்டிருக்கிறது.

# வகுப்புவாதப் பிசாசு!

## திறமைக்குத் திரையிடுகின்றது!

பிரிட்டிஷ் எஜமானர்களின் கீழ் இலங்கை இருந்த காலத்தில் அரசாங்க இலாக்காக்களிலும், சர்வகலாசாலைகளிலும், மற்றும் வேறு பலஸ்தானங்களிலும் சேர்வதற்கு விண்ணப்ப தாரர்களின் தகுதி, தராதரம் மட்டுமே கோரப்பட்டது

பிரவேசப் பரீட்சையில் குறிப்பிட்டளவு புள்ளிகள் பெறவேண்டுமென்றிருந்தால் தேவையான புள்ளிகள் பெற்றவர்கள் 'கலாசாலையிலோ அல்லது வேறு அரசாங்கவேலைகளுக்கோ அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் சிங்களவர்களா,? தமிழர்களா,? முஸ்லிம்களா,? பறங்கியரா? என்று பிரிட்டிஷார் ஆராய்ந்ததில்லை.

நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. அதன் விளைவாக, பட்டப் படிப்பு, சட்டப்படிப்பு, அரசாங்க உத்தியோகம் எல்லாமே விகிதாச் சரப்படி வகுக்கப் பட்டுவிட்டது. உதாரணமாக 75 வீதம் சிங்களமாணவர்கள், 15 வீதம் தமிழ் மாணவர்கள், 5 வீதம் முஸ்லீம் மாணவர்கள், 5 வீதம் பறங்கியரும் பரவலாயுள்ள மற்ற வகுப்பினரும் தெரிவு செய்யப் படுவார்கள். புகுமுகப் பரீட்சைக்கு வேண்டிய புள்ளிகள் ஐம்பது என்ருல் 95 புள்ளிகள் பெற்றிருந்தாலும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மாணவருக்குச் சித்திபெறமுடியாமற் போய்விடும். பரீட்சையில் சித்தியடைந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவன் 50 புள்ளிகள் மட்டுமே பெற்றிருப்பான். அரசாங்க லிகிதர் சேவைத் தேர்தல் பரீட்சையிலும் இந்தமுறையே கையாளப்பட்டு வருகிறது.

எல்லோருக்கும் வேலைகிடைக்க வேண்டும் என்றநோக்கத்தோடுதான் இந்த நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று கூறப்படுகிறது.

அந்த நடவடிக்கையின் பயனுகவும், உத்தியோக மொழிப்பிரச்சனை காரணமாகவும் அரசாங்க சேவையிலும், சர்வகலாசாலைகளிலும் இப்பொழுது சிறுபான்மை இனத்தவரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து விட்டது. மேலும் குறைந்து கொண்டுவருகிறது. நோக்கமே இதுவேயானுல் ஆட்சியாளர்களுக்கு அது வெற்றிதான்.

அவ்வப்போது சிறுபான்மை இனத்தவர் அரசியல் சூதாட்டக் காய்களாக அவஸ்தைப் படுவதுண்டு. ஆளுங் கட்சி எதுவாக இருந்தாலும் அதைத் தாக்குபவர்கள் அரசாங்க சேவையில் சிறுபான்மையினரே அதிகமாக இருக்கின்றனர் என்று கர்ச்சிப்பார்கள்'

அரசியல் வாதிகளின் தாக்குதல்களைச் சமாளிக்கவோ, அல்லது பலரை 'வெளியேற்ருமல் வெளியேற்ற' நடவடிக்கை எடுக்கவோ பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி சில இரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிருர். அவரது ஆணையின் மீது புள்ளி விபர இலாக்கா, அரசாங்க சேவையிலுள்ளவர்களில் சிங்களவர் எத்தனைபேர்? தமிழர் எத்தனை பேர்? முஸ்லிம்கள் எத்தனை பேர்? பறங்கியர் எத்தனை பேர்? என்று கணக்கெடுத்து வருகிறது. இதன் விளைவு என்னவாகுமென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### அமுதம் ஆண்டுவிழா பரிசுப் போட்டி

**கேள்விகள்**

1. ஜெமினி கணேசன், சாவித்திரி ஜோடியாக நடித்த முதல் படம் என்ன?

2, ஸ்ரீதர் கதை வசனம் எழுதிய முதல் படத்தின் பெயர் என்ன?

3, நடிகை பி, சரோஜாதேவி "எங்கள் குடும்பம் பெரிசு'" என்ற படத்தில் நடித்திருக்ருக்கிருரா?

4. ஒரு பெரிய நடிகர் ஒரு வீரனின் வரலாற்றுப் படத்தில் நடித்ததின் மூலம் ஆசியாவிலேயே சிறந்த நடிகராகத்தெரிவு செய்யப்பட்டார், யார் அந்த நடிகர்?

5. ஒரு தேசத் தியாகியின் மகன் இன்றைய திரையுலகில் பிரபல நடிகராக உள்ளார், யார் அந்த நடிகர்?

6, புதையல் படத்தின் இசையமைப்பாளர் யார்?

7, சிவாஜி கணேசன் நடித்த ஸ்ரீ வள்ளி படத்தில் வரும் "கற்பகச் சோலையிலே" என்னும் பாடலைப் பாடியவர் யார்?

8, வேலைக்காரி படத்தின் கதை வசன கர்த்தா யார்?

9, தெய்வப்பிறவி படத்தின் டைரக்டர் யார்?

10, ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்து, பொங்கலன்று தென்னகத்தில் திரையிடப்பட்ட கலர்ப்படத்தின் பெயர் என்ன,

# 'அமுதம்' ஆண்டு விழா

## பரிசுப் போட்டி

## முதற்பரிசு ரூபா 1000-00

### மற்றும் சிறந்த பல பரிசுகள் வழங்கப்படும்.

நிபந்தனைகள்

1. 'அமுதம்' ஆண்டு மலருக்காக ரூபா இரண்டு செலுத்துபவர்கள் மட்டுமே போட்டியில் பங்கு பெறலாம். ஆனல் போட்டிக்கோ கட்டணம் எதுவும் கிடையாது.

2. ரூபா இரண்டு ஆண்டு மலருக்காக அனுப்புபவர்களுக்கு ஒரு பத்திரம் மட்டுமே அனுப்பிவைக்க முடியும்.

3. போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்கான அனுமதிச்சீட்டு அனுப்பி வைக்கப்படும். இவ்விழாவை முன்னிட்டு பிரபல தென்னிந்திய நடிகர்கள் ஈழம் வருவது குறிப்பிடத்தக்கது.

4, போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு அமுதம் ஆண்டு மலர், ஆண்டுவிழா நடைபெறும் இடத்திலேயே கொடுக்கப்படும். ஆண்டுவிழாவுக்கு வர வசதியில்லாதவர்களுக்கு அமுதம் ஆண்டுமலர் அனுப்பிவைக்கப்படும்,

5, ஒன்றுக்கு அதிகமானேர் சரியான விடை எழுதி அனுப்பினுல் அவர்களுடைய கூப்பன்கள் குலுக்கி எடுக்கப்பட்டு கூப்பன்களின் வரிசைப்படியே பரிசுகள் வழங்கப்படும்.

6, 'அமுதம்' ஆண்டு விழாவிற்கென முக்கியமாக தெரிவுசெய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் யாருமே போட்டியில் பங்குபற்ற முடியாது,

7, போட்டி முடிவு தேதி மே 5ம் திகதி இரவு 12 மணிக்குப் பிறகுவரும் எந்தப் போட்டிக் கூப்பன்களுமே போட்டிப் பத்திரங்களோடு சேர்க்கப்படமாட்டா,

8, பரிசுகள் அமுதம் ஆண்டு விழாவிலன்றே தென்னகத்து கதாநாயக நடிகர்களால் வழங்கப்படும்.

9, போட்டிக்கூப்பன்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பாமல் வேறு எந்த விலாசங்களுக்காவது அனுப்பி வைத்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல,

கூப்பனுேடு அனுப்ப வேண்டிய கேள்விப் பத்திரத்தை இதன் இடது பக்கத்தில் காண்க.

முக்கிய குறிப்பு:

போட்டிப்பத்திரம் தேவையானேர் அவ்வூர் ஏஜண்டுகளிடமோ அல்லது அமுதம் அலுவலகத்திடமோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம், விடைகளை வெள்ளை நிறத் தாளில் அழகுற எழுதி போட்டிக் கூப்பனுேடு சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும். ஒன்றுக்கு அதிகமான விடைகளை ஒரு பத்திரத்தோடு எழுதியனுப்பினுல் அந்தப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, ஒவ்வொரு விடைத்தாளுக்கும் ஒவ்வொரு போட்டிக் கூப்பனும் ஆண்டு மலர்ப் பணமும் இருப்பது அவசியம், விடைகளை எழுதியனுப்பும் கடித உறையின்மேல் 'அமுதம் ஆண்டுவிழா பரிசுப் போட்டி' என குறிப்பிட மறக்கவேண்டாம்,

POSTAL ORDER ஜோ. ஜீ. ஜெயசீலன் எனவும் செட்டியார் தெரு உபதபாற் கந்தோர் எனவும் எழுதியனுப்புதல் வேண்டும்,

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**ஜோ. ஜீ. ஜெயசீலன்**

131, நியூன் ஹாம் ஸ்குயர், கொழும்பு - 13

### போட்டிக் கூப்பன்

பெயர்.........................................

விலாசம்.........................................

.........................................

கையொப்பம்.........................................

போஸ்டல் ஓடர் நிர்.........................................

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி: அச்சகம்.